பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா. 7.00

பங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | வைகாசி 18 | திங்கட்கிழமை | (31.05.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 164

ராம்கோ சிமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

## ஹக்கீமுக்கு எதிராக அவதூறு நடவடிக்கை

# முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் நால்வர் கட்சியில் இருந்து நீக்கம்

### உயர் பீடம் முடிபு; நீக்கப்பட்டோர் அரசுடன் இணைவு!

(நமது நிருபர்)

**ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்களான ரிசாத் பதியுதீன், நஜீப், எ.மஜீத்,ஹுசைன் பைலா மற்றும் முஸ்லிம் காங்கிரஸின் அதிஉயர் அரசியல் பீட உறுப்பினர் இனாமுல்லா ஆகியோர் கட்சியின் அங்கத்துவத்தில் இருந்தும் அவர்கள் கட்சியில் வகித்த பதவிகளில் இருந்தும் நேற்று முதல் நீக்கப்பட்டுள்ளனர்.**

**இதனையடுத்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிளவுபடும் நிலையில் இருப்பதாக அரசியல் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.**

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் எம்.பியுமான ரவூப் ஹக்கீமுக்கும், குமாரிகுரே என்ற பெண்ணுக்குமிடையே தொடர்பு இருப்பதாகக் கூறி மேற்படி மூன்று எம்.பிக்களும் இனாமுல்லாவும் பிரசாரம் செய்ததையடுத்து அவர்கள் கட்சியில் இருந்து இடைநிறுத்தப்பட்டிருந்தனர்.

இவர்களுக்கான ஒழுக்காற்று விசாரணைகளுக்கான குற்றப்பத்திரிகைகள் தனித்தனியாக் கட்சியினால் அனுப்பிவைக்கப்பட்டிருந்தன.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கும் கட்சியின் தலைமைக்கும் எதிராக சதி முயற்சி மேற்கொண்டதாகவும் மற்றும் கட்சியின் கடடுக் கோப்புக்ளை மீறிகட்சி மீது அவதூறு பரப்பியதாகவுமான குற்றச்சாட்டுக்களே இவர்களுக்கெதிராகச் சுமத்தப்பட்டிருந்தது.

மூன்று பாராளுமன்ற உறுப்பினர்கள் மீதான குற்றச்சாட்டுக்களும் இனாமுல்லா மீதான குற்றச்சாட்டுக்களும், குறித்து தாஜ்சமுத்திரா ஹோட்டலில் நேற்றுக் கூடிய அதி உயர் பீடம் விரிவாக ஆராய்ந்தது.

கட்சியின் அதிஉயர் பீட விசாரணைக்கு வருமாறு கட்சியில் இருந்து இடைநிறுத்தப்பட்டவர்களுக்கு அழைப்பு விடுத்திருந்தும் அவர்கள் எவரும் விசாரணைக்குச் சமுகமளிக்கவில்லை.

இதனைத் தொடர்ந்து கட்சியின் தலைமைக்கும் கட்சிக்கும் எதிராக இடைநிறுத்தப்பட்ட 3எம்.பிக்களும் பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கைகளும் பேட்டிகளும் பரிசீலனைக்கு எடுக்கப்பட்டு அரசியல் உயர் பீட உறுப்பினர்களின் ஒருமனதான முடிபின் பிரகாரம் இவர்களைக் கட்சின் அனைத்துப் பதவிகளில் இருந்தும் நீக்குவதாக முடிவு செயயப்பட்டது.

குறித்த நால்வரையும் பதவிகளில் இருந்து நீக்கியமை தொடர்பாக கட்சியின் செயலாளரும் எம்.பியுமான எம்.டி.கசன் அலி அறிகை யொன்றை நேற்று வெளியிட்டிருந்தார்.

அந்த அறிக்கையில் பதவி விலத்தப்பட்டுள்ள நால்வர் மீதான தொடர் நடவடிக்கைகள் எடுக்கப் படவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸில் இருந்து விலத்தப்பட்ட 3 எம்.பிக்களும் கட்சியில் இருந்து கொண்டே தமது போராட்டதை நடத்தப் போவதாக அறிவித்துள்ளனர்.

இந் நிலையில் சிறுபான்மைப் பலத்துடன ஆட்சியை நடத்திவரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசுடன் இம் 3 எம்பிக்களும் இணைந்து செயற்பட முடிபு செய்திருப்பதாகவும்.இதன் மூலம் அவர்களுக்கு அமைச்சுப் பொறுப்புக்களும் வழஙகப்படலாமெனவும் கொழும்பு அரசியல வட்டாரங்களில் பேசப்படுகிறது. (ம)

## மின்சாரம் தாக்கி இளைஞன் மரணம்

### அரியாலை அம்மன் ஆலயத்தில் பரிதாபம்

(யாழ்ப்பாணம்)

மின்சாரம் தாக்கி இளைஞர் ஒருவர் மரணமாகியுள்ளார். இச் சம்பவம் நேற்றுக் காலை 9 மணியளவில் அரியாலையில் இடம் பெற்றுள்ளது.

அரியாலை மேற்கு ஸ்ரீசிவகாமி அம்மன் கோவிலில் இன்று நடைபெறவுள்ள திருவிழாவுக்காக வெளி வீதியில் ரியூப் லைற்றுக்கள் கட்டப்பட்டிருந்ததாகவும். குறிப்பிட்ட நபர் தென்னை ஒன்றுடன் சாய்ந்திருந்தபோது ரியூப் லைற்றுடன் இணைக்கப்பட்ட வயரில் இருந்து மின்சாரம் தாக்கியதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மின்சாரம் தாக்கிய நிலையில் அவர் உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்ட சமயம் வழியில் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. அரியாலையைச் சேர்ந்த பத்மநாதன் செல்வநாதன் (வயது21) என்ற இளைஞனே மரணமானவராவர். இவரது சடலம் மரண விசாரணையின் பொருட்டு யாழ்.போதன வைத்தியசாலையில் வைக்கபட்டுள்ளது. (ச-19)

## கற்கள் மிதக்கின்றன இராமேஸ்வரத்தில் அதிசயம்

(கொழும்பு)

பொதுவாக எப்போதுமே கற்கள் நீரில் மிதப்பதில்லை. ஆனால் தமிழ்நாடு ராமேஸ்வரத்தில் கற்கள் மிதக்கின்றன. நம்புவதற்கு சிறிது கஷ்டம் தான் ராமேஸ்வரத்தில் கற்கள் மிதப்பதென்பது அதிசயமாக இருப்பினும் இற்றைக்குப் 17 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் நிகழ்ந்ததாகக் கருதப்படும் ஸ்ரீராமர்

(10ஆம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டில் பேச்சு நடப்பதை ஹெல உறுமய எதிர்க்காதாம்

(கொழும்பு)

வெளிநாடொன்றில் பேச்சுக்களை நடாத்துவதானது, சகல அரசியல் கட்சிகளினதும் அதில் ஆர்வமுள்ள ஏனைய குழுக்களினதும் பிரதிநிதித்துவத்தை மட்டுப்படுத்துவதாக இருக்கும் எனினும் வெளிநாட்டில் பேச்சுக்கள் நடாத்தப்படுவதற்கு ஹெல உறுமய எதிர்ப்புத் தெரிவிக்காது என தர்மலோக தேரர் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டில் பேச்சுக்களை நடத்தும் போது சகல அரசியல் கட்சிகளினதும் பரந்த பங்களிப்பைத் தடுப்பதாக இருக்கும். இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்கு சகல கட்சிகளினதும் கருத்துக்களும் பெறப்பட வேண்டியிருக்கும் வெளிநாட்டில் பேச்சுக்களை நடத்தும்படி புலிகள் கேட்டிருக்கும் நிலையில் அதற்கு நாம் எதிர்ப்புத் தெரிவிக்கமாட்டோம்.

ஆனால், அந்த வெளிநாடு இந்தியாவாக இருந்தால் அது புத்திசாலித்தனம். ஏனெனில் இனப்பிரச்சினை தொடர்பில் இந்தியாவே

(10ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் காங்கிரஸுக்குச் சவாலாக புதிய அரசியல் கட்சி உதயமானது

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கெதிராக புதிய முஸ்லிம் அரசியல் கட்சியொன்று உருவாக்கப்பட்டுள்ளது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் சிரேஷ்ட அமைச்சர்களின் ஆதரவுடன் உருவாக்கப்பட்டுள்ள இக் கட்சி எதிர்வரும் மேல் மாகாண சபைத் தேர்தலுக்கான தமது வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளது. இக்கட்சியின் தலைவராக நஸார் அகமட் நியமிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் முலாமில் உம் இக் கட்சியில் அடங்குவர்.

அரசாங்கத்தின் நன்மை கருதியே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைக் சேர்ந்த ஸ்ரீபதி சூரியாராய்ச்சி இக் கட்சியை ஒழுங்கமைத்துள்ளார்என தெரிவிக்கப் படுகிறது.

பிரசாரச் செலவுகளுக்காக கட்சியில் உள்ள ஒவ்வொருவருக்கும் ஒரு மில்லியன் ரூபா ஒதுக்கப் பட்டுள்ளது. பிரசாரத்தின் ஒரு பகுதியாக ஹக்கீமை முஸ்லிம் காங்கிரஸின் தலைமைத்துவத்தில் இருந்து அகற்றும் முயற்சிகள் இடம் பெறவுள்ளது.

ஹக்கீமை விலகுமாறு பல்வேறு பள்ளிவாசல் நிர்வாகத்திற்கும் சமயத் தலைவர்களுக்கும் அழுத்தம் கொடுப்பதாகவும் அமையும்.

இதேவேளை, ஹக்கீமின் தனிப்பட்ட வாழ்க்கை குறித்தும் அத்துடன் அவர் கப்பல் போக்குவரத்து அமைச்சராக இருந்த போது இடம் பெற்ற ஊழல்கள் குறித்தும் விசாரணை செய்ய குழுக்களும் நியமிக்கப்படவுள்ளன. (த-6)

## அரசு-புலிகள் பேச்சு மேசையில் நோர்வேப் பிரதிநிதிகள் அமரக்கூடாது

### ஜே.வி.பி கடும் எச்சரிக்கை

(கொழும்பு)

புலிகளுடன் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படும் போது நோர்வேத் தரப்பினர் சமாதானப் பேச்சுக்கள் நடைபெறும் மேசையில் அமர்வதற்கு எடுக்கும் எத்தகைய நடவடிக்கைகளையும் எதிர்க்கப் போவதாக ஜே.வி.பி எச்சரித்துள்ளது.

பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுவதில் முன்னர் இருந்த எதிர்ப்பு, கடந்த வாரம் நிகழ்ச்சி நிரல் தயாரிக்கும் விடயத்தில் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் வேறுபாடுகளை நீக்குவதற்கு எடுத்த முயற்சியில் சமாதானத் தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து அற்றுப் போயிருக்கிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியின் போது இடம் பெற்ற சமாதானப் பேச்சுக்களில் நோர்வேத் தரப்பினர் பேச்சுவார்த்தைக்குத் தலைமை தாங்கியிருந்தனர்.

ஆனால் நோர்வேயின் பங்கு பேச்சுக்களை ஏற்பாடு செய்வதேயன்றிப் பேச்சுக்களில் பங்குபற்றுவதாக இருக்கக் கூடாதென ஜே.வி.பி கடந்த வாரம் அறிவித்துள்ளது.

அத்துடன் கண்காணிப்புக்குழுவிடம் நோர்வேப் பிரதிநிதிகள் இருத்தலாகாதெனவும் ஜே.வி.பி கூறியுள்ளது. இதனை ஜே.வி.பியின் பிரதி காணிவிவசாய அமைச்சர் விமல் ரத்னாயக்கா தெரிவித்

(10ஆம் பக்கம் பார்க்க)

## மனோ கணேஷன் இன்று வன்னிக்கு

(யாழ்ப்பாணம்)

மேல் மாகாண மக்கள் முன்னணித் த்லைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மனோகணேசன் இன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசவுள்ளார். (த)

## சடலம் ஒப்படைப்பு

(வவுனியா)

வவுனியா குருமன் காட்டுப் பகுதியில் சூட்டுக் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்ட நபரின் சடலம் நேற்று உறவினிடம் கையளிக்கபட்டது.

திருகோணமலையைச் சேர்ந்த அருளானந்தம் அருள்பரன் வயது22 என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்(த-13)

நடுவ நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சு.ப.இளவரசனை விடுவிக்காவிட்டால்

# ரயில் நிலையங்கள் மீது தாக்குதல் நடாத்தப்படுமென சாகாக்கள் மிரட்டல்

## விழுப்புரம், கடலூர், திருச்சியில் பெரும் பதற்றம்

(சென்னை)

கைது செய்யப்பட்டுள்ள தமிழர் விடுதலைப்படைத் தலைவர் சு.ப.இளவரசனை விடுதலை செய்யாவிடின், முக்கிய புகையிரத நிலையங்களைக் குண்டு வைத்துத் தகர்க்கப் போவதாக விடுதலைப்படையினர் மிரட்டல் விடுத்துள்ளனர்.

தமிழர் விடுதலைப்படைத் தலைவர் சு.ப.இளவரசனை பொலிஸார் பல வருடங்களாகத் தேடி வந்த நிலையில், தனது கூட்டாளிகளுடன் கொளத்தூர் அருகே உள்ள அடிப்பாலாறு என்ற இடத்தில் பதுங்கி இருந்த போது அதிரடிப்படைப் பொலிஸார் துப்பாக்கி முனையில் சுற்றி வளைத்துக் கைது செய்தனர்.

சு.ப.இளவரசனுடன் அவரது கூட்டாளி சகாதேவனும் கைது செய்யப்பட்டார். அவர்களிடம் இருநத துப்பாக்கிகள் மற்றும் சக்தி வாய்ந்த வெடிகுண்டுகள் ஆகியனவும் பறிமுதல் செய்யப்பட்டன.

கைது செய்யப்பட்ட சு.ப.இளவரசன் சேலம் மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவரை விடுதலை செய்யாவிட்டால் விழுப்புரம், கடலூர், திருச்சி ஆகிய புகையிரத நிலையங்களையும், அதற்கு இடைப்பட்ட தண்டவாளங்களையும் குண்டுவைத்துத் தகர்க்கப்போதாக சு.ப.இளவரசனின் கூட்டாளிகள் விழுப்புரம் புகையிரத நிலைய அதிகாரிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் மிரட்டல் விடுத்துள்ளனர்.

விழுப்புரம் புகையிரத நிலைய அதிகாரி தன்ராஜுக்கு கடந்த வெள்ளிக்கிழமை காலை இக் கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.


எங்களது குரு சு.ப.இளவரசனையும், அவரது நண்பரையும் பொலிஸார் கைது செய்து உள்ளனர். அவர்களை இக்கடிதம் கண்ட 15 நாட்களுக்குள் விடுதலை செய்யவேண்டும் இல்லாவிட்டால் விழுபபுரம், கடலூர், திருச்சி ஆகிய இடங்களிலுள்ள புகையிரத நிலையங்கள் மற்றும் அதற்கு இடைப்பட்ட பகுதியிலுள்ள தண்டவாளங்கள் என்பன வெடிவைத்துத் தகர்க்கப்படும் என அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது குறித்து விழுப்புரம் புகையிரத நிலைய அதிகாரி தன்ராஜ், விழுப்புரம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ராமநாதனிடம் புகார் செய்தார். இதையடுத்து பொலிஸார் விழுப்புரம், கடலூர், திருச்சி ஆகிய பகுதிகளில் தீவிர கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும் இந்தக் கடிதத்தை எழுதியவர்கள் யார்? எங்கிருந்து அனுப்பினார்கள்? என்பது குறித்து தீவிர விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேபோன்று, கடலூர் புதுநகர் மற்றும் கடலூர் முதுநகர் புகையிரத நிலையங்களிலும் பொலிஸார் அதிரடிச் சோதனைகளை நடத்தினார்கள். மெட்டல் டிடெகடர் கருவிகளைக் கொண்டு வெடிகுண்டுகள் உள்ளதா? என்று அங்குலம், அங்குல மாகச் சோதனை நடாத்தி வருகின்றனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து, விழுப்புரம், கடலூர் ஆகியவற்றில் பெரும்பரபரப்பு ஏற்பட்டுள்ளது. (18)




## கிரிமினல்களுக்கு அமைச்சரவையில் இடம் முன்னாள் துணைப்பிரதமர் அத்வானி குற்றச்சாட்டு

அண்மையில் நடந்து முடிந்த மக்களவைத் தேர்தல் முடிவுகள் எந்தவொரு தனி நபருக்கோ அரசியல் கட்சிக்கோ தெளிவான ஆதரவைத் தெரிவிக்கும் முடிவாக அமையவில்லையென்று முன்னாள் துணைப்பிரதமர் எல்.கே.அத்வானி கூறியுள்ளார்.

புதுடில்லியில் செய்தியாளர்களிடம பேசிய அவர், மன்மோகன் சிங் அமைச்சரவையில் அரசியல் கட்டாயத்தின் அடிப்படையில், கிரிமினல் குற்றவாளிகளுக்கு இடமளிக்கப்பட்டுள்ளதாக அத்வானி குற்றிஞ்சாட்டினார்.

14 ஆவது மக்களவையில் பா.ஜ.க.ஆக்க பூர்வமான எதிர்க் கட்சியாகச் செயற்படுமென்றும் கூறினார். (து)



நாகலாந்து மாநிலத்தின் கோன்யாக் பழங்குடியினர் சந்தல் பகுதியில் நடைபெற்ற கலாசார நிகழ்ச்சியில் தங்கள் பாரம்பரிய விதை விதைப்பு நடனத்தை ஆடினர்.

# சென்னையில் கடல் நீரைக் குடி நீராக்கும் திட்டம் மத்திய அரசுக்கு கருணாநிதி பாராட்டு

காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணிக் கட்சிகள் இடது சாரிக் கட்சிகளுடன் கலந்து பேசி அண்மையில் புதுடில்லியில் வெளியிட் டுள்ள குறைந்த பட்சப் பொதுத் திட்டத்தில், தங்களது கோரிக்கைகள் பலவற்றை நிறைவேற்றும் வகையில் வந்துள்ள அறிவிப்புக்கள் பலவற்றுக்கும், குறிப்பாக தமிழ் மொழியை செம் மொழியாக அறிவித்துள்ளமைக்கும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணித் தலைவர் சோனியா காந்தியையும் பிரதமர் மன்மோகன் சிங்கையும் வாழ்த்தி நன்றி கூற வார்த்தைகள் கிடையாது என்று தி.மு.க.தலைவர் கருணாநிதி கூறியுள்ளார்.

சென்னையில் அண்மையில் நடைபெற்ற நாடாளுமன்றக் கட்சிக் கூட்டத்துக்குப் பின்னர், செய்தியாளர்களிடம் பேசுகையில் கடல் நீரைக் குடி நீராக்கும் திட்டம் நாட்டிலேயே முதன் முறையாகச் சென்னையில் அமுல்படுத்தப் போவதாக மத்திய அரசு அறிவித்திருப்பது குறித்துத் தான் மகிழ்ச்சியடைவதாகத் தெரிவித்தார்.



ஜெயின் கமின் அறிக்கை தொடர்பாக கண்காணிப்புக்குழு பற்றி மத்திய அமைச்சர் அர்ஜுன் சிங் தெரிவித்ததாக ஆங்கில நாளேடு ஒன்று பற்றிக்கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த கருணாநிதி, இது செய்தியின் ஒரு பக்கந்தான் என்றும் இதன் மற்றப்பக்கத்தை இன்னொரு பிரபல ஆங்கில நாளேடு வெளியிட்டிருப்பதைச சுட்டிக்காட்டினார்.

முன்னதாகப் புதுடில்லியிலிருந்து சென்னை வந்த 7 தி.மு.க.மத்திய அமைச்சர்களுக்கு அக் கட்சியினர் உற் சாக வரவேற்பளித்தனர். (து)

### கர்நாடகத்தில் காங்கிரஸ் முதலமைச்சர்

கர்நாடக மாநிலத்தில் காங்கிரஸ தலைமையிலான புதிய கூட்டணி அரசு அண்மையில் பதவியேற்றது.

முதலமைச்சராகக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த தரம்சிங் பதவியேற்றுக் கொண்டார்.

தேவ கௌடாவின் ஐக்கிய ஜனதாதளக் கட்சியைச் சேர்ந்த சித்தராமையா துணை முதலமைச்சராகப் பொறுப்பேற்றுள்ளார். (து)

### மகளிர் இட ஒதுக்கீட்டுச் சட்டம் மீண்டும் கொண்டு வரப்படும்

மகளிர் இட ஒதுக்கீட்டுச் சட்டம் நாடாளுமன்றத்தில் மீண்டும் கொண்டுவரப்படுமென்று சபாநாயகர் பதவிக்கான வேட்பாளராக ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ள மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் சோம்நாத் சட்டர்ஜி கூறியிருக்கிறார்.

மேற்கு வங்க மாநிலம் துர்க்காரா என்னும் இடத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மகளிர் இட ஒதுக்கீட்டு சட்டத்தை நிறைவேற்ற ஐக்கிய முற்போக்குக் கூட்டணி முழு முயற்சியெடுக்கும் என்று கூறினார். (து)

## தோல்விக்குக் காரணம் பா.ஜ.க. கூட்டணியே - சந்திரபாபு நாயுடு

பாரதிய ஜனதாக் கட்சியுடன் கூட்டணி வைத்துக் கொண்டதால் தான் ஆந்திராவில் தெலுங்கு தேசம் கட்சி தோல்வியடைந்ததற்குக் காரணம் என்று அக்கட்சியின் தலைவர் சந்திரபாபு நாயுடு தெரிவித்துள்ளார்.

வாஜ்பாய் அரசின் சில நடவடிக்கைகள் சிறுபான்மை மக்களைப் பாதிப்பதாக அமைந்தது தான் தோல்விக்குக் காரணம் என அவர் மேலும் கூறினார். (து)

**இந்தியச் செய்திகள்**

# 14 ஆவது லோக்சபா கூட்டத்தொடர் எதிர்வரும் 2 ஆம் திகதி ஆரம்பம்

## 7இல் ஜனாதிபதி உரையாற்றுவார்

(புதுடில்லி)

இந்தியாவின் 14 ஆவது லோக் சபாக் கூட்டத்தொடர் எதிர்வரும் ஜூன் மாதம் 2 ஆம் திகதி ஆரம்பமாகவுளள அதேநேரம், ஜனாதிபதி டாக்டர் அப்துல் கலாம் எதிர்வரும் 7 ஆம் திகதி உரையாற்றுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

லோச்சபாவுக்குப் 10 ஆவது முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சபையின் மூத்த உறுப்பினரான சோமநாத் சட்டர்ஜி, தற்காலிக சபாநாயகராகப் பதவியேற்று உறுப்பினர்களுக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைப்பார். இரண்டு நாட்கள் இந்த நிகழ்ச்சி மட்டுமே நடைபெறும்.

போட்டியிருந்தால் 4 ஆம் திகதி சபாநாயகர் தேர்தல் நடைபெறும். ஐக்கிய முற்போக்குக் கூட்டணி மற்றும் இடதுசாரிகள் ஆதரவுடன் இம்முறை சோம்நாத் சட்டஜி சபாநாயகராகத் தெரிவு செய்யப்படுவது உறுதியாகிவிட்டது. எனவே, அவரே சபாநாயகராகப் பொறுப்பேற்பார். இவ்வாறு தற்காலிக சபாநாயகரே சபாநாயகராகப் பதவியேற்பது வரலாற்றில் இது இரண்டாவது முறை. கடந்த 1952 இல் மூத்த உறுப்பினரான ஜி.வி.மாவ்லங்கர் இதே போன்று தற்காலிக சபாநாயகராகப் பணியாற்றி பின்னர் சபாநாயகராகப் பதவியேற்றார்.

எதிர்வரும் 7ஆம் திகதி லோக் சபா, ராஜ்ய சபா ஆகிய இரு சபைளின் கூட்டுக் கூட்டத்தில் ஜனாதிபதி டாக்டர் அப்துல்கலாம் உரையாற்றுவார்.

அதைத் தொடர்ந்து, மறுநாள் ஜனாதிபதி உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும். அதன் மீதான வாக்கெடுப்பு ஜூன் 10 ஆம் திகதி நடைபெறும். அத்துடன், இரு சபைகளும் ஒத்திவைக்கப்படும்.

கடந்த பெப்ரவரி 6 ஆம் திகதி லோக்சபா கலைக்கப்பட்டபோது தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு முழுபட்ஜெட் தாக்கல் செய்யவில்லை. மாறாக ஜூலை 31 ஆம் திகதி வரையான செலவினங்களுக்கு பாராளுமன்றத்தின் முன் அனுமதி மட்டுமே பெற்றிருந்தது.

ஆகவே, அதற்கு முன் ரயில்வே மற்றும் பொது பட்ஜெட் தாக்கல் செய்து விவாதம் நடத்தி பாராளுமன்றத்தில் நிறைவேற்றி ஆகவே வேண்டும். அதற்கு வசதியாக ஜூன் 28ஆம் திகதி பாராளுமன்ற பஜ்ஜெட் கூட்டத் தொடர் கூட்டப்படும் எனக் கூறப்படுகிறது.

இல்லாவிட்டால் தே.ஜ.,அரசு போலவே மேலும் இருமாதங்களுக்கு பாராளுமன்றில் செலவினங்களுக்கு ஒப்புதல் பெறலாமா என்றும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது. (18)



தமிழகத்தில் மதுரை உள்ளிட்ட நகரங்களில் நேற்று முன்தினம் பலத்த இடியுடன் நல்ல மழை பெய்தது. மதுரை வீதிகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடும் காட்சி.

# இலங்கையை மீளக் கட்டியெழுப்பும் பணியில் வடகிழக்கிற்கு முன்னுரிமையளிக்க வேண்டும்

## ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் அபிவிருத்தித் திட்டங்களில் பாரிய இடைவெளி நிலவிவருகின்றது. இதன் காரணமாக பொருளாதார வளர்ச்சியில் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இவ் இடைவெளியை இல்லாமல் செய்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி உதவிகளை வழங்கவேண்டும்.

யாழ். மாவட்டத்தின் மனித நேய அமைப்புக்களின் ஒன்றியத்தின் தலைவர் சு.பரமநாதன் கடந்த வியாழனன்று யாழ்ப்பாணம் வந்திருந்த ஆசிய அபிவிருத்தி வங்கியின் உபதலைவர் தலைமையிலான குழுவிடம் இவ்வாறு கோரிக்கை விடுத்திருந்தார்.

யாழ்.அரச செயலகத்தில் அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற நிக்கொட் திட்டங்கள் பற்றிய மீளாய்வுக் கூட்டத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உபதலைவர் லிகியூன் ஜின், நிக்கொட் இணைப்பாளர் ரீ.லங்காநேசன் ஆகியோர் சமுகமளித்திருந்தனர்.

ஒன்றியத் தலைவர் சு.பரமநாதன் அங்கு குறிப்பிடும் போது,

இலங்கையை மீளக் கட்டியெழுப்பும் பணியில் முதல் கட்டமாக வடக்கு - கிழக்கு மாகாணத்தை அனைத்து வழிகளிலும் மீளக்கட்டியெழுப்ப வேண்டும். அதன் மூலமே முழுநாட்டையும் மீளக்கட்டியெழுப்ப முடியும்.

புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்டதனைத் தொடர்ந்து யாழ்.மாவட்டத்தில் பல செயற்திட்டங்களை அமுல் செய்வதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி மேலும் உதவிகளை வழங்க முன்வரவேண்டும். ஆசிய அபிவிருத்தி வங்கியின் செயற்திட்டங்கள் வாயிலாகவேதான் வடக்குக்கும் தெற்குமிடையில் உறவுப் பாலம் உருவாகியுள்ளது.

இந்த நிலையில் தென் பகுதியில் உருவாக்கப்பட்ட தென்பகுதி கடுகதிப் பாதை போன்று வடபகுதிக்கான கடுகதிப்பாதை ஒன்றினை அமைக்க ஆசிய அபிவிருத்தி வங்கி உதவ முன்வர வேண்டும்.

அத்துடன், யாழ்ப்பாணத்தில் மிக முக்கியமான யாழ்ப்பாணம்-காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் - பலாலி வீதி, யாழ்ப்பாணம் -பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம் - காரைநகர் வீதி மற்றும் ஏ-9 வீதி ஆகிய ஐந்து பிரதான வீதிகளும் அபிவிருத்தி செய்யப்பட்டு, வீதிகளுக்கான வலைப்பின்னல் திட்டம் உருவாக்கப்படவேண்டும் என வலியுறுத்தினார்.

யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதி பொ.விக்னேஸ்வரனும அங்கு கருத்துக் கூறினார்.

(உ-16)

## மாகாண சபை தேர்தலுக்கான வாக்குச் சீட்டுகள் அச்சிடும் பணிகள் விரைவில் ஆரம்பம்

(இராஜகிரிய)

யூலை மாதம் 10 ஆம் திகதி நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலுக்கான வாக்குச் சீட்டுகள் அச்சிடும் பணி விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது.

தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களுக்குரிய இலக்கங்கள் வழங்கப்படாமையே வாக்குச் சீட்டுகள் அச்சிடும் பணிகளில தாமதம் ஏற்படக் காரணம் என தெரிவிக்கும் தேர்தல் செயலகம்,

இன்னமும் ஓரிரு நாட்களுக்குள் வேட்பாளர்களுக்குரிய விருப்பு இலக்கங்கள் வழங்கப்பட்டுவிடும் என்றும் இவ்வாறு இலக்கங்கள் வழங்கப்பட்டதும் வாக்குச் சீட்டுகள் அச்சிடும் பணிகள் ஆரம்பமாகும் எனவும் மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை தேர்தல் சட்ட விதிகளை மீறி பிரசாரங்களைச் செய்வோர் மீது நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் தலைமையகத்திடம் தேர்தல் செயலகம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (4-61)

## அமைச்சர் அனுராவினால் இரு அதிகாரிகள் நீக்கம்

(கொழும்பு)

கைத்தொழில், சுற்றுலா, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க பிரதான வெளிநாட்டு முதலீட்டு நிறுவனத்தில் கடமையாற்றிய இரு உயர் அதிகாரிகளைப் பதவி நீக்கம் செய்துள்ளார். நாட்டின் பிரதான வெளிநாட்டு முதலீட்டு நிறுவனமான மேற்படி நிறுவனத்தில் நிலவிய ஊழல் மோசடிகளை நீக்கும் பொருட்டே முதற்கட்டமாக மேற்படி நடடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, மேஜர் ஜெனரல் வசந்த பெரேரா, ஜி.என்பதி கிரிகோறள ஆகிய இருவருமே பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு மாதாந்தச் சம்பளமாக தலா 1இலட்சம் ரூபாவும், மேலதிகச செலவுகளுக்காக மாதாந்தம் 1 இலட்சத்து 38 ஆயிரமும் வழங்கப்படுகின்றது.

இந்நிறுவனத்தின் பணிப்பாளர்களாக தலைவர் லலித் டிமெல், எஸ்.ஜயவர்த்தன, திருமதி பிறேமா குரே ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். இதுபற்றி அனுரா பண்டார நாயக்க தெரிவிக்கையில்,

தான் இவ்விடயமாக ஜனாதிபதியுடன் கலந்துரையாடியிருப்பதாகவும், அதன் பின்னரே மேற்படி நடவடிக்கையை மேற்கொண்டதாகவும், எதிர்வரும் 3ஆம் திகதி வியாழனன்று இடம்பெறவுள்ள கூட்டத்தில் மேலும் புதிய தலைவர்கள் தெரிவு செய்யப்படுவர்கள் என்றும் கூறினார். (தி-06)


## சிறுவிளம்பரம்

### நாவல்கள்

செங்கைஆழியானின் புதிய நாவல்கள். போரே நீ போ, வானும் கனல் சொரியும், சாமபவி, ஈழராஜா எல்லாளன், கூடில்லா நத்தைகளும் ஓடில்லா ஆமைகளும் மற்றும் கிடுகு வேலி, யாணை, குவேனி, காவோலை, ஆச்சி பயணம் போகிறாள்- பிரபல புத்தகசாலைகளில் விற பனையாகின்றன. கமலம் பதிப்பகம் 75/10A, பிறவுண்வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.

(8530)


## முன்னாள் அமைச்சர் மீது சி.ஐ.டி. யினர் விசாரணை

(கொழும்பு)

சுமார் 2 பில்லியன் ரூபா பெறுமதியான கூரைத் தகடுகள் விவகாரத்தில் தொடர்புபட்டிருப்பதாகக் கூறி முன்னாள் வர்த்தக நுகர்வோர் அமைச்சரும், தற்போதைய கொழும்பு மாவட்ட எம்பி.யுமான ரவி கருணாநாயக்காவை கொழும்பு குற்றவியல் பிரிவு விசாரணை செய்துள்ளது.

இப்பிரிவினரின் தரவின் படி ரவி கருணாநாயக்க தனது தேர்தல் பிரிவிற்குட்பட்ட குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்காக ஒதுக்கப்பட்ட அலுமினியம் கூரைத்தகடுகளை விற்பனை செய்ததாக அவர் மீது செலுத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை மறுத்துள்ளதாகத் தெரியவருகிறது.

ரவி கருணாநாயக்காவின் வாக்கு மூலத்தின்படி வறிய குடும்பங்களுக்கு இக்கூரைத் தகடுகளை வழங்கும் ஒழுங்குகளை தாம் செய்யும் வரை மேற்படி கூரைத் தகடுகள் தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள கோட்டை மாநகரசபை உறுப்பினர் அந்தனி பெரேரா ஜெயசூர்யாவிடம கையளிக்கப்பட்டிருந்தன எனக் குறிப்பிட்டிருந்தார்.

மேற்படி கூரைத் தகடுகள் முன்னைய அரசின் ஆட்சிக் காலத்தில் நாட்டில் வறிய மக்களுக்கு வழங்குவதற்காக இறக்குமதி செய்யப்பட்வை. குற்றவியல் பிரிவினர் இதற்கு முன்னர் முன்னாள் அமைச்சர் எம்.எச். மொகமட்டின் வாக்கு மூலத்தையும் பெற்றுள்ளனர். இவ் விடயம் தொடர்பாகவே ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட எம்.பி. லிலந்தபெரேராவும் தற்போது விளக்கமறியலில வைக்கப்பட்டுள்ளார். (தி-06)

## தடுப்பு மருந்தேற்றல்

(பொன்னாலை)

யாழ்.குடாநாட்டில் ஜப்பானிய (J.E. மூளைக்காய்ச்சல்) தடுப்பு மருந்தேற்றல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எதிர்வரும் ஜுன் மாதம் முதல் வாரத்திலும், ஜுலை மாத முதல் வாரத்திலும் இத் தடுப்பூசிகள் போடுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக மானிப்பாய் சுகாதார வைத்திய பணிமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (தி-49)

## புகைத்தலைக் கட்டுப்படுத்த ஒன்றிணைந்த செயற்பாடு தேவை

**உலக புகைத்தல் எதிர்ப்பு தினம் இன்றாகும். அதனையொட்டி இக்கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது**

புகைத்தலைக் கைவிட்டால் செல்வம், சிறப்பு, சுகம் உண்டாகும் என்பது முது மொழி. ஆனால், இன்று முது மொழிகளையும் மறந்து மக்கள் செயற்படுவதைக் காணக்கூடியதாக உள்ளது. சிகரெட்டின் ஒரு முனையில் இருப்பது நெருப்பு. மறு முனையில் இருப்பது முட்டாளின் வாயரம். இன்று புகைப்பவன் நாள் ஒன்றிற்கு 10 சிகரெட் புகைத்தால் 11 நிமிட ஆயுளைக் குறைக்கின்றான். இதனால், புகைப்பவன் 5 வருடங்கள் தொடக்கம் 10 வருடங்களுக்கு முன்பே இறக்கின்றான்.

ஒருவர் புகைக்கும்போது 25 சதவீத புகையை தமது உடலினுள் உள்வாங்குகின்றார். மிகுதி 75 சதவீதத்தை காற்றுடன் கலக்கவிடுகின்றார். இதனால் வெளிவரும் புகையால் நிக்கொட்டின் எனும் நஞ்சும் வேறு இரசாயனப் பொருட்களும் கலந்து மற்றவர்களுக்கு கேடு விளைவிக்கின்றது.

புகைப்பதனால் வருடம் தோறும் உலகில் 50 இலட்சத்திற்கும் மேலானோர் இறக்கின்றனர். இலங்கையில் மட்டும் கடந்த வருடம் 22ஆயிரம் மக்கள் இறந்துள்ளார்கள். மேலும் இலங்கையில் 12 வயதிற்கு மேற்பட்ட ஆண்களில் மொத்த தொகையில் 55 சதவீதமானவர்கள் புகைப்பழக்கமுடையவர்கள். இந்த புள்ளி விபரத்தின் பிரகாரம் பாடசாலை மாணவர்களிடையே 10 சதவீதத்தினர் புகைக்கின்றார்கள். 18 சதவீதமான பல்கலைக்கழக மாணவர்கள் புகைப் பழக்கத்திற்கு அடிமையாகின்றார்கள் என்று ஆய்வு மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

மேலும், புகைப்பழக்கம் உடையவருக்குப் பிறக்கும் குழந்தைகளில் 40 சதவீத பிள்ளைகளுக்கு புற்றுநோய் வர வாய்ப்புண்டு என்றும் ஆய்வுமூலம் கண்டறியப்பட்டுள்ளது.

புகைப்பதனால் ஏற்படும் தீமைகள் பற்றி ஆராயும் பொழுது பின்வரும் கேடுகள் மனிதன் ஒருவனுக்கு ஏற்படுகினறது. அவையாவன உடம்பின் சகல உறுப்புக்களையும் பாதிப்படையச் செய்கின்றது. புகைப்பவரது நோய் எதிர்ப்பு வலுகுறையும், பாலியல் உணர்வை மழுங்கடிக்கின்றது. கண் பார்வையை மழுங்கடிக்கும், சுவாச உறுப்புக்களைப் பாதிப்படையச் செய்து தொடர்ச்சியான இருமல், ஆஸ்துமா ஏற்பட செய்கின்றது. எனவே, மக்களாகிய நாங்கள் ஏன் இந்த புகைப் பழக்கத்தை நாடவேண்டும். சற்று சிந்தித்துப் பார்த்தால் இந்தக் கெட்ட பழக்கத்தை விட முடியாத ஒருசில பெற்றோர்கள் பிள்ளைகளைக் கொணடே சிகரெட்டை வாங்குகிறார்கள். எனவே, எந்தக் காலத்திலும் பிள்ளைகளைக் கொண்டு சிகரெட் வாங்குவதை நிறுத்திக் கொள்ள வேண்டும். மேலும், உலகில் வருடாவருடம் மே 31ஐ புகைத்தல் எதிர்ப்புத் தினமாகக் கொண்டாடிவரும் வேளையில், எமது அயல் நாடான இந்தியா மே 1ஆம் திகதியில் இருந்து பொது இடங்களில் புகைப்பது தடை செய்துள்ளது. ஏன் எமது நாடும இதனைப் பின்பற்ற முடியாதுள்ளது?

ஆகவே, புகைத்தலைக் கட்டுப்படுத்த ஒன்றிணைந்த செயற்திட்டங்களை வகுத்து எமது நாட்டில் செயற்படுத்த முடியாதா என்று வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம் கேட்டுக் கொள்கின்றது.

**செ.குமாரசிங்கம் ஜே.பி.**
**செயலாளர், வடபிரதேச நல்லொழுக்க சம்மேளனம்.**


பிரதி வெள்ளி தோறும் வலம்புரியுடன்

KID'S OF ENGLISH

(ஆங்கில இணைப்பு)

வெளிவரவுள்ளது.

பள்ளிச் சிறுவர்களே!

மற்றும் பருவத்தினரே!

பயனடைய வாங்குங்கள்.

Kid's of English


**அன்பு வாசகர்களே!**

ஊர்த்தரிசனப் பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள் வரவேற்கப்படுகிறது. உங்கள் ஊரில் நிலவும் நிறை குறை களை எழுதி, உங்கள் ஊருக்குப் புத்துயிர் அளியுங்கள். உங்கள் ஆக்கங்களைப் புகைப்படங்களுடன்,

ஊர்த்தரிசனம்
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு எழுதி அனுப்பி வையுங்கள்.

# இன்று ஒரு தகவல்

## குரு தேடிய மூலிகை

ஒரு மலையடிவாரத்தில் குருவானவர் ஒருவர் த்ன் சீடர்களுடன் ஆச்சிரமம் அமைத்து இருந்தார். குருவானவருடன் அவரிலும் கூடிய வயதுடைய சீடர்களும் பலர் இருந்தார்கள்.

நரை திரை விழுந்த சீடர்கள் பலருடன் இருந்த குருவானவா. தாம் இளமையுடன் இருக்கவேண்டும் என்பதில் ஆசையிருந்தது. அந்த ஆசையால் இளமை குன்றாதிருப்பதற்கான மூலிகை அப்பகுதியில் இருப்பதறிந்து அதனைத் தேடியலைந்தார்.

எப்படியும் மூலிகையைத் தான் பெற்றுக் கொண்டாற் தனது இளமை மாறாது எனும் பேராசையால்ஒருநாள் வயதான தமது சீடரிடம் உணவு சமைக்கும் படி கூறிவிட்டு மூலிகை தேடச்சென்று விட்டார். குரு வருவதற்கு முன் சமையல் செய்து விடவேண்டுமென எண்ணிய வயதான சீடர் சமைக்கத் தொடங்கினார்.

சோறு சமையற் பாத்திரத்தில் கொதிக்க ஆரம்பித்தது. பொங்கிய சோற்றைக் கிளறி விடுவதற்கு பக்கத்திலிருந்த தண்டை எடுத்துத் துளாவினார். உடனே அச் சோறு கறுப்பாகிவிட்டது. சோறு கறுப்பாகியது கண்ட சீடன் பயந்து, குரு தனனை ஏசப் போகின்றாரே என எண்ணி அவர் வருவதன் முன் அந்தச் சோற்றைத் தான் சாப்பிட்டு விட்டு வேறு சமைத்துவிடலாம் என எண்ணிக் கறுப்பாயிருந்த சோற்றைத் தானே சாப்பிட்டுவிட்டார்.

அப்பொது அங்கே ஒரு அதிசயம் நடந்தது. வயதான சீடரின் உடம்பு இளமை அடைந்தது. சீடன் இளைஞனாக நின்றார். மூலிகை தேடிச் சென்ற குருவானவர் மீண்டும் அவ்விடம் வந்து தனது சீடனைக் காணாது நீ யார்? என அவரிடம் வினாவினார். அப்பொழுது சீடன் நடந்ததைக் கூறினான்.

குருவானவர் சீடனிடம் சோற்றைக் கிளறிய தண்டம் (மூலிகை)எங்கே என்று கேட்டார்.சீடன் பயந்தபடி அதை அடுப்பில் வைத்தேன் எரிந்துவிட்டது என்றார். கோபங்கொண்ட குரு சீடனின பிடரியில் அடித்தார். உடனே சீடன் உண்டசோறு வாந்தியாய் வெளிவந்தது.

குருவானவர் சீடன் கக்கிய சோற்றைத் தான் அள்ளி உண்டார்.உடனே அவருக்கும் இளமை வந்துவிட்டது. இப்போ குருவும் -சீடனும் இளைஞர்களாயினர். குருவாயிருந்தவர் சீடராக,சீடனாக இருந்தவர் குருவானார். குருவை மிஞ்சிய சீடர்கள் அன்றல்ல இன்றும் எம் மத்தியில் இருக்கவே செய்கின்றார்கள்.

இந்தக் குருசீடர் கதை ஆசைவெட்கம் அறியாது என்பதை எமக்கு நன்கு உணர்த்துவதாக உள்ளது. அன்றியும் சித்த வைத்தியத்துறையில் மூலிகைகள் நவீன மருத்துவத்திலும் பார்க்கப் பன்மடங்கு அபூர்வமானவை என்பதையும் உணரவைக்கின்றது.

உடல் நலம் பேண விரும்பும் இன்றைய சந்ததியினர் மூலிகைபற்றி ஆர்வம் காட்ட இக்கதை ஒரு எடுத்துக்காட்டாகும்.

*நீர்வை மணி*

### அமெ. மிலேனியம் சலஞ்ச்

## கூ.தா.அதிகாரிகள் குழு இலங்கைக்கு 5 நாள் விஜயம்

(கொழும்பு)

அமெரிக்காவின் 'மிலேனியம் சலஞ்ச் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த உயர்மட்ட அதிகாரிகள் குழுவொன்று 5நாள் விஜயத்தை மேற்கொண்டு எதிர்வரும் முதலாம் திகதி இலங்கைக்கு வருகை தரவுள்ளது.

அமெரிக்க அரசாங்கத்தின் கூட்டுத்தாபனமாக விளங்கும் இந்த நிறுவனம், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு ஒத்துழைப்பையும், ஒத்தாசையையும் வழங்கி வருகின்றதுடன், முதலீடுக்ளைச் செய்வதன மூலம் வளர்முக நாடுகளின் கல்வி, விவசாயம், பொருளாதாரம் ஆகியனவற்றை அபிவிருத்தி அடையச் செய்து வருகிறது.

தவிரவும், தனியார் துறைச் செயற்பாடுகள், கட்டடத்துறை வளர்ச்சி ஆகியவற்றுக்கும் இவ் அமெரிக்க நிறுவனம் உதவி வருகிறது.

இதேவேளை, இவ்வாண்டுக்கான ' மிலேனியம சலஞ்ச்' இன் உதவிகளைப் பெறுவதற்கு இலங்கை உட்பட 16 நாடுகள் தகுதிபெற்றுள்ளன.

இந்த விஜயத்தின் போது இலங்கைக்கு உதவிகள் வழங்குவது தொடர்பான தகைமைகள் குறித்து விரிவாக பரிசீலனை செய்யப்படவுள்ளது.

இக் குழுவினர் வெளிவிவகார அலுவல்கள் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், நிதியமைச்சர் சரத்அமுனுகம, மத்திய வங்கி ஆளுநர் எஸ். ஜெயவர்த்தன ஆகியோர் உட்பட மேலும் பல அதிகாரிகளைச் சந்தித்து விரிவாகக கலந்துரையாடவுள்ளனர்.


அத்துடன் வர்த்தகத் தலைவர்கள், எதிர்க்கட்சிப் பிரமுகர்கள் மற்றும் உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் ஆகியோரையும் இவர்கள் சந்தித்துப் பலதரப்பட்ட விடயங்கள் குறித்தும் ஆராயவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-18,60)

# இலங்கையின் உயர்வுக்கு கிரிக்கெற் எடுத்துக்காட்டு

## பிரதமர் மகிந்த ராஜபக்ஷ புகழ்ச்சி

(கொழும்பு)

பண்டைய காலங்களில் இலங்கையர்கள் எந்த விடயத்திலும் அதியுயர் திறமையை எட்டக்கூடியவர்களாகவே இருந்தனர். பணடைய நீர்ப்பாசனத்



தொகுதிகள் அனுராதபுர,பொலநறுவை, ருகுணு பிரதேசங்களின் புராதான கட்டடக்கலைகள்,நிர்வாகம் என்பனவே இதற்கு சிறந்த எடுத்துக்காட்டுகள்.

இவ்வாறு அண்மையில் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் பேசும் போது, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து பேசிய அவர், தற்காலத்திலும்கூட கிரிக்கெற்றில் எமது நாடு உன்னத ஸ்தானத்தை அடைந்துள்ளது. இத்தகைய சாதனைகள் அனைத்தும வெளிநாடுகளின் உதவியுடன் உள்நாட்டு நிபுணர்களின் ஒத்துழைப்புடன் எட்டப்பட்டவை. இவற்றில இருந்து தாம் அறிவது என்னவெனில் எத்துறையிலும் முன்னேற இலங்கையர்களுக்கு முடியும் என்பதேயாகும். இவ்வாறு முடியவில்லையெனில் எம்மில் ஏதோ தவறு இருக்கிறது என்பதே அர்த்தம்.

இலங்கையின் உற்பத்திப்பொருட்கள் உலகில் அதுஉன்னத இடத்தைப் பிடிக்கவில்லை என்பது உண்மைதான். ஏனெனில் இலங்கையின் தயாரிப்பாளர்கள உலகின் தலைசிறந்த நுட்பங்களை ஏற்றுக்கொண்டு பயன்படுத்துவதில்லை என்பதே இதற்குக் காரணம். இதை இவர்கள் நிவிர்த்தி செய்வார்களாயின், உலக சந்தையில் நிலையான இடத்தைப்பெறமுடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (தி)

### ஐ.நா. அமைதிப்படையுடன் இணைய

## 800 இலங்கை இராணுவத்தினர் அடுத்த மாதம் ஹெய்ட்டி செல்கின்றனர்

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த சுமார் 800 பேர் அடுத்தமாதம் முதல் ஹெய்ட்டியில் நிலைகொண்டுள்ள ஐக்கிய நாடுகள் அமைதிகாக்கும் படையுடன் இணைந்து பணியாற்றவுள்ளனர்.

இதுபற்றி இராணுவப்பேச்சாளர் கருத்து வெளியிடுகையில்,

ஹெய்ட்டிக்கு அனுப்பப்படவுள்ள 800 இராணுவ வீரர்களில் 25இராணுவ உயர்அதிகாரிகளும் உள்ளடக்கப்படுகின்றார்கள்.

இவர்கள் அங்கு யுத்த நடவடிக்கையில் ஒரு போதும் ஈடுபடமாட்டார்கள் என்றார். இதேவேளை, ஹெய்ட்டியில் அண்மைக்காலங்களாக சிவில் சமூகத்தின் மத்தியிலும் அரசியல் பீடத்திலும் அமைதியின்மை நிலவி வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது. (உ60,10)

# இராசி பலன்

**31.05.2004**

**(வைகாசி 18,திங்கட்கிழமை)**

**துவாதசி பி.ப 4.48 வரை**

**சித்திரை மு.ப 10.28 வரை**

**இராகுகாலம் 7.22- 8.52 மணிவரை**

**சுபநேரம் 11.52-1.22 மணிவரை**

*சித்தாமிர்தம், பிரதோஷ விரதம்*

**மேடம்**

மனோ தைரியம், பெருமையடைதல், காரிய சித்தி, உறவினர் வழி உதவி.

**இடபம்**

தடைப்பட்ட காரியம் கைகூடும், மன மகிழ்ச்சி, பொருள் சேர்க்கை, நண்பர் சந்திப்பு.

**மிதுனம்**

மனக்கவலை, எடுத்தகாரியம் தாமதமாகும், வியாபாரவிருத்தி, பணத்தட்டுப்பாடு.

**கடகம்**

தொழில் நன்மை, மனப்பதட்டம், வாக்கு மேன்மை, பிறர் உதவி.

**சிங்கம்**

எடுத்த காரியம் கைகூடும், மாதர் நட்பு, சந்தோசம் , பெருமையடைதல்.

**கன்னி**

போசன சுகக்குறைவு, மனோ சங்கடம், காரிய தாமதம், அதிக செலவு.

**துலாம்**

நண்பர்உதவி, வெகுமதி, புதிய திருப்பம், முயற்சி கைகூடும்.

**விருச்சிகம்**

காரிய தாமதம், சோம்பல், அபகீர்த்தி, சயன சுகக் குறைவு.

**தனுசு**

நண்பர் சந்திப்பு, குடும்பமகிழ்ச்சி, செய் தொழில் நன்மை, முயற்சி கைகூடும்.

**மகரம்**

எடுத்தகாரியம் கைகூடும், நன் கொடை, உற்சாகம், அதிகாரம்.

**கும்பம்**

எதிர்பாராத செலவு, பிரயாணம், உடல் நலக் குறைவு, கட்டுப்பாடு.

**மீனம்**

மனக்கவலை, காரியம்தடைப் படும், பிரயாண பயம், பொருள் விரயம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

*வளவன்*

## மன்னார் கட்டுக்கரைக் குளம் 20 கோடி செலவில் புனரமைப்பு

மன்னார் முருங்கனில் அமைந்துள்ள கட்டுக்கரைக் குளம் 20 கோடி ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது.

இதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் தற்போது இடம் பெற்று வருகின்றன. 33ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் இந்தக் கட்டுக்கரைக்குளத்தை நம்பிப் பயிர் செய்யப்படுவதுடன, 160 குளங்களுக்கும் இதிலிருந்து நீர் விநியோகிக்கப்படுகின்றது.

இலங்கையில் குறிப்பிடத்தக்க பெரிய குளங்களில் ஒன்றாகிய இக்குளம் விவசாயம், கால்நடைவளர்ப்பு, மீன்பிடி ஆகிய மூன்று துறைகளுக்கும் அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது.

இப் புனரமைப்புக்கான நிதியை நியாப் நிறுவனம் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-35)

## காரை. பிரதேச செயலகத்தில் பணியாளர் பற்றாக்குறை

### பொதுமக்கள் கவலை

(காரைநகர்)

காரைநகர் பிரதேச செயலகத்தில் உத்தியோகத்தர் பற்றாக்குறை நிலவுவதால் பொதுமகக்ள்தமது தேவைகளை நிறைவேற்ற காலதாமதமாவதாகக் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த வருடம் புதிதாக உருவாக்கப்பட்ட மேற்படி பிரதேச செயலகத்தில் உதவித திட்டப் பணிப்பாளர், நிர்வாக உத்தியோகத்தர்,சமூகசேவை உத்தியோகத்தர், தொழில நுட்ப உத்தியோகத்தர், சமுர்த்தி முகாமையாளர் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சிற்றூழியர்கள போன்ற அத்தியாவசியப் பணியாளர்களுக்கும பற்றாக்குறை நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால், தற்போது கடமையில் உள்ள உத்தியோகத்தர்களே பதில் கடமையாக இவர்களுக்கான பணிகளையும் மேற்கொள்வதால் பல்வேறு அசௌகரியங்களை பொதுமக்கள் எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (உ-246)

## புகைத்தல் எதிர்ப்பு விழிப்புணர்வு நிகழ்வு

(காரைநகர்)

சமுர்த்தி அதிகாரசபையின் ஏற்பாட்டில் சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினமான மே 31 அதாவது இன்றைய தினம் புகைத்தல எதிர்ப்பு விழிப்புணர்வு நிகழவுகள் பிரதேச ரீதியாக நடத்தப்படவுள்ளன.

மேற்படி புகைத்தல் எதிர்ப்புதினம் கொடி தினமாகவும் அனுஷ்டிக்கப்படவுள்ளது. இதற்காக சமுர்த்தி உத்தியோகத்தர்கள் கொடி விற்பனையை மேற்கொண்டு அதன்மூலம் சேகரிக்கும் பணத்தினை வறியமக்களின் சமூகசேவைகளிற்காகவும் ஊனமுற்றோர், நலிவுற்றோரின சமூக சேவைக்காகவும் பயன்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (உ-246)

## எவ்.ஏ.கிண்ணத்தை

# இரட்ணம் கழகம் சுவீகரித்தது


இலங்கைக் கால்பந்தாட்டத் துறையின் அதிஉயர் விருதான எவ்.ஏ.கிண்ணத்திற்கான கால்பந்தாட்ட இறுதிப் போடடியில் நடப்புச்சம்பியனான றினோன் கழகத்தை தோற்கடித்து இரட்ணம் கழகம் சம்பியன் பட்டத்தைச் சுவீகரித்துக்கொண்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் மின்னொளியில் நடைபெற்ற இந்தப் போட்டியில் பனால்டி உதையின் மூல மாக 5:3என்ற கோல் கணக்கில் இரட்ணம் கழகம் சம்பியனானது.

மிகப் பரபரப்பாக நடைபெற்ற இந்த இறுதிப் போட்டியின் முதல் அரைப்பகுதியிலேயே இரட்ணம் கழகம் கோல ஒன்றைப் பெற்று முன்னணிக்கு வநதிருந்தது. தொடர்ந்து முதல் அரைப்பகுதியில் இரு அணிகளும் பலமாக முயன்றும் மேலதிக கோல்கள் எதனையும் பெறமுடியவில்லை. இடைவேளை நேரததின் பின்னரும் இரு அணிகளும் கோல்கள் போடுவதற்கான பகீரத முயற்சியில் ஈடுபட்டபோதும், போட்டி நிறைவடைவதற்கு 8நிமிடங்கள் மட்டுமே இருக்கையில் றினோன் கழகத்தினர் தமது அணி சார்பில் கோல் ஒன்றைப் பெற்று போட்டியைச் சமன்செய்தனர். தொடர்ந்தும் இரு அணிகளும் ஆட்ட நேரத்தில் கோல்கள் எதனையும் பெறாதநிலையில் மேலதிகநேரம் வழங்கப்பட்டது.

மேலதிக நேரத்திலும் மிகவும் விறுவிறுப்பாக இரு அணிகளும் விளையாடிய போதும் எந்த அணியினாலும் கோல் ஒன்றைப் பெறமுடியவில்லை இதனை அடுத்து பனால்டி முறையில் போட்டியின் முடிவைத் தீர்மானிக்கும் நிலை உருவானது. இதன்போது இரட்ணம் கழகம் 5கோல்களையும், றினோன் கழகம் 3கோல்களையும் பெற்றுக் கொண்டன. எனவே போட்டியில் 5:3 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்று இரட்ணம் கழகம் சம்பியன் பட்டத்தினை சுவீகரித்துக் கொண்டது.

கடந்த வருடம் நடைபெற்ற எவ்.ஏ.கிண்ண இறுதிப் போட்டியில் நடப்புச் சம்பியனான றினோன் கழகம் விமானப்படைக் கழகத்தை 1:0என்ற கோல் கணக்கில் வெற்றிகொண்டு சம்பியனானது எனினும் இம்முறை இறுதிப்போட்டியில் இரட்ணம் கழகத்திடம் தோல்வியைத் தழுவிக்கொண்டுள்ளது. 1995ஆம் ஆண்டு நடைபெற்ற இலங்கைக் கால்பந்தாட்ட சம்மேளனத்தில் எவ்.ஏ.கிண்ண இறுதிப்போட்டியிலும் இவ் விரு கழகங்களுமே விளை யாடின. அப்போது 2:0என்ற கோல் கணக்கில் இரட்ணம் கழகத்தை வெற்றிகொண்டு றனோன் கழகம் சம்பியனானது எனினும 10 வருடங்களின் பின்னர் இவ் விரு அணிகளும் மீண்டும் எவ்ஏ. கிண்ண இறுதிப் போட்டியில் மோதிய போதும், முன் னைய தோல்வியை இரட்ணம் கழகம் தற்போது ஈடுசெயதிருப்பதாக இலங்கைக் கால்பந் தாட்ட விமர்சகாகள் கருத்து வெளியிட்டுளனர். (தி-68)



ஏ.எப்.எல். போட்டியில் பங்கு பற்றும் மார்க் றிச்சியூரு பந்தைத் தடுத்தாடும் காட்சி.

## பங்களாதேஷ் அணி 9விக்கெற் இழப்பிற்கு 406 ஓட்டங்கள்

மேற்கிந்தியத் தீவுகளிற்கு கிரிக்கெற சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பங்களாதேஷ் கிரிக்கெற் அணிக்கும், மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெற் அணிக்குமிடையில் செனலுசியா விளையாட்டரங்கில நடைபெற்றுவரும் முதலாவது டெஸட் கிரிக்கெற் போட்டியில், பங்களாதேஷ அணி தனது முதல் இன்னிங்சில 9விக்கெற்றிழப்பிற்கு 406 ஓட்டங்களைப் பெற்று வலுவான நிலையில் உளளது.

இவ் டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவின் போது பங்களாதேஷ் அணி 406 ஓட்டங்களைப்பெறறிருந்தது. துடுப்பாட்டத்தில் பங்களாதேஷ் அணித்தலைவர் ஹபிபுல் பஸ்ஸார்113 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்திருந்தார். இதில் 15பவுண்டரிகள் அடங்கலாக ஹபிபுல் பஸ்ஸார் பெற்றுககொண்ட இச்சதம் இவர் டெஸட் கிரிக்கெற் போட்டியில் பெற்ற 3ஆவது சதமாகவும் அமைந்திருந்தது.

மேலும் பங்களாதேஷ் அணியின் துடுப்பாட்டத்தில் முகமட் அஸ்ரப்புல் 81ஓட்டங்களையும் பின்வரிசைத் துடுப்பாட்ட வீரரான முகமட்ராபீக் 103ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

மேற்கிந்தியத் தீவுகள் அணியின் பந்துவீச்சில் பெற்ரோ கொலின்ஸ் 3விக்கெற் றுக்களையும், ராம்நரேஷ் ச் வான் 3விக்கெற்றுக்களையும் ஜேமன் லோஸன் 2விக்கெற் ருக்களையும் கைப்பற்றினர். (தி-68)



வடக்கு பிரான்ஸில் உள்ள லீவின் தலைநகரில் அக்ரோபடிக்ஸ் உலக சமபியன்ஷிப போட்டிகள் நடந்து வருகின்றன. இதில் ரஷ்யக் குழுவினர் அற்புத சாகசங்களை நிகழ்த்தி பார்வையாளர்களைக் கவர்ந்தனர். அவர்களை மட்டுமா? இந்தத் தங்கங்கள் தங்கப் பதக்கத்தையும் கவர்ந்து சென்று விட்டனர்.

## விளையாட்டுச் செய்திகள்



பிரான்ஸில் இடம்பெற்ற நீர்ச்சறுக்குப் போட்டியில் அவுஸ்திரேலிய வீரர் லேய்னி வீச்சிலி வேகமாகச் செல்லும் காட்சி.

## 600 விக்கெற்றுக்களை வீழ்த்துவதே எனது இலக்கு

### ஆஸி. வீரர் மக்ராத் கங்கணம்


டெஸ்ட் கிரிக்கெற் போட்டிகளில் 600 விக்கெற்றுக்களைக் கைப்பற்ற வேண்டுமென்பதே எனது தற்போதைய ஒரே இலக்கு என அவுஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் கிளைன் மக்ராத் கூறியிருக்கின்றார். மேலும் 2007ஆம் ஆண்டுவரை சர்வதேச கிரிக்கெற் போட்டித் தொடர்களில் விளையாடவேண்டுமென்பதும் தனது தற்போதைய விருப்பமாக உள்ளதர்கவும் மக்ராத் மேலும் தெரிவித்துள்ளார்.

கணுக்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக சுமார் 10மாதகாலம் வரையில் சர்வதேச கிரிக்கெற் போட்டிகள் எதனிலும் ஆடாத நிலையில் தற்போது மீண்டும் சர்வதேச கிரிக்கெற் போட்டிகளில் ஆடக்கூடிய முழு உடல் ஆரோக்கியத்துடன் இருப்பதாகவும் கூறியுள்ளார். குறிப்பாக 2007ஆம் ஆண்டுவரை சர்வதேச கிரிக்கெற் போட்டிகளில் தன்னால் ஆடமுடியும் என்ற முழு நம்பிக்கை தற்போது தனக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்த நம்பிக்கையும், உற்சாகமும் இந்த 10 மாதகாலப்பகுதி ஓய்வின் போதே கிடைத்திருப்பதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

கிளைன் மக்ராத் இதுவரை 95டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 430டெஸ்ட் விக்கெற்றுக்களை வீழ்த்தியுள்ளார். மேலும் அதிக டெஸ்ட் விக்கெற்றுக்களைக் கைப்பற்றியுள்ள வீரர்கள் வரிசையில் 6 வது இடத்தில் மகராத் இருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. இதில் கிளைன் மக்ராத் குறிப்பிட்டது போல் 2007ஆம் ஆண்டுவரை சர்வதேச கிரிக்கெற் போட்டிகளில் ஆடவேண்டுமாயின் தனது 37 வயதுவரை தொடர்ந்து விளையாட வேண்டும். இது வேகப்பந்து வீச்சாளரான இவருக்கு எவ்வளவு வீதம் சாத்தியமானது என்பது பற்றி தற்போதைய நிலையில் கூற முடியாது உள்ள போதும் தற்போது தான் பெற்றுள்ள உற்சாகமான பயிற்சிகளின் மூலம் முன்னையதைவிட சிறப்பாக பந்துவீச முடியுமென கிளைன் மக்ராத் கூறியிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (தி-68)

### இந்திய அணியில் இடம்பிடிப்பது குறித்து

## இளம் கிரிக்கெற் வீரர்களுக்கு விளக்கமளிக்கிறார் ட்ராவிட்



இளம் கிரிக்கெற் வீரர்கள் இந்திய அணியில் இடம பெறுவதற்கான வழிமுறைகள் குறித்து அணியின் துணைத் தலைவா ராகுல ட்ராவிட் விரிவான விளக்கமொன்றை வழங்கியுள்ளார்.

இந்தியாவில் பலரும் இளம் வயதில் கிரிக்கெற் விளையாட்டில் அதிக ஆர்வமுடன் ஈடுபடுகின்றனர். இதில் சிலர் மட்டுமே தங்கள் கிரிக்கெற் கனவுகளில் வெற்றிபெறுகின்றனர். மேலும் அதிர்ஷ்டவசமாக ஒரு சிலருக்கு மட்டுமே இந்திய கிரிக்கெற் அணியில் விளையாட வாய்ப்பும் கிடைக்கிறது.

என்னுடைய பள்ளிப்பருவத்தில் நானும் பல்வேறு பயிற்சி முகாம்களில் சேர்ந்து பயிற்சி பெற்றேன். கேகி தாராபூர் வாசு பரன்ஜி ஆகியோா எனக்குப் பயிற்சி அளித்தனா். இந்தப் பயிற்சி முகாம் எனக்கு மிகவும் பயனுளளதாக இருந்தது. நிறைய விஷயஙகளைக் கற்றுக் கொண்டேன்.

ஆகையால், இந்தியக் கிரிக்கெற் அணியில் இடம்பெற வேண்டுமெனில் வீரர்கள் கடுமையாகப் பயிற்சி செய்ய வேணடும் இளம் வயதில் வாய்ப்பைத தவறவிட்டால் அடுதது முன்னேறுவதென்பது மிகவும் கடினம். கிரிக்கெற்றில் உயர்ந்த நிலையை அடைய வேண்டுமெனில். இளம் வீரர்கள் தங்கள் தரத்தை உயர்த்திக்கொள்ள வேண்டும். திறமையை வளர்த்துக்கொள்ள வேண்டும். மேலும், தங்கள் மன நிலையை ஒருமுகப்படுத்தவும், உறுதியுடன் இருக்கவும் பழகிக் கொள்ள வேண்டும்.

இவையனைத்தும் இருந்த போதிலும் அதிர்ஷ்டம் என்பதும் வேண்டும். தற்போதைய இளம் வீரர்களுக்குத் தேசியப் பயிற்சி முகாம் ஒரு வரப்பிரசாதம் தான். இங்கு வீரர்களுக்கு சர்வதேசத் தரத்தில் சிறப்பாகப் பயிற்சி அளிக்கின்றனர். உலகிலேயே சிறப்பாக பயிற்சி அளிப்பதும் இங்கு தான். இதுபோன்ற பயிற்சி முகாம்களை இளம் வீரர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென இளம் வீரர்களுக்கு தனது அறிவுரைகளை வழங்கியுள்ளார் ராகுல் ட்ராவிட். (தி-18)

# புலிகளை இராணுவ ரீதியில் வெல்லலாம்

# ஜனாதிபதிக்கு இன்னமும் நப்பாசை

## தமிழ்க் கார்டியன் செய்தி வெளியீடு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியில் வெல்லலாம் என்ற நப்



பாசை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உட்பட ஏனைய தலைவர்களுக்கு இன்னமும் உள்ளது என்று 'தமிழ்க் கார்டியன்' வார இதழின் ஆசிரியர் தலையங்கத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

அவ் ஆசிரியர் தலையங்கத்தில்,

ஜனாதிபதி சந்திரிகாவின் நய வஞ்சக அரசியல் வெளிபபடையானது. அவரும் அவரது அரசுத் தலைவர்களும் புலிகளை யுததத்தால் வெல்லலாம் என்ற நப்பாசையிலேயே இன்னமும் உள்ளனர். தமிழ் மககளுக்கு அதிகாரப் பகிர்வின் மூலம் தீர்வு கிடைக்க வேண்டும் என்பதைவிட அவர்கள் மீது யுத்தம் நடத்த வேண்டும் என்பதே தமது விருப்பம் என்று ஜே.வி.பி. பகிரங்கமாகத் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்றில் சபாநாயகரை தெரிவு செய்யமுடியாத நிலையில உள்ள ஜனாதிபதியின் சிறுபான்மை அரசு, அடிப்படை அரசியல பிரச்சினைகளைப் பேசித் தீர்த்து வைக்கும் என்று கூறுவது அவரின் நயவஞ்சக அரசியலை வெளிப்படுத்துகிறது.

சமாதான முயற்சிகளின் ஆரம்பத்திலேயே ஜே.வி.பியினரின் முட்டுக்கட்டைகளைத் தாண்ட முடியாமல் ஜனாதிபதி நிற்கிறார். சண்டைகளின்றி அமைதியாக உள்ள இந்தக்காலப்பகுதி கடந்த காலக் கொடுரபபோரின் நினைவுகளை மறைகலாம். ஆனால், இந்த அமைதி தொடர்ந்தும நீடிக்கும் என்று கூற முடியாது.

ஏனெனில் இந்த அவகாசம் புலிகளை யுத்தத்தால் வெல்லவேண்டும் என்ற அவா கொண்ட ஜே.வி.பி., இராணுவத்தைத் தயார்படுத்தும் காலப் பகுதியாகிவிடுமோ என அஞ்சவேண்டியுள்ளது.

அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படை விடயமான "இராணுவ சமநிலை" என்ற வரம்பை மீறி இராணுவத்தினர் புலிகளின் மீது தாக்குதல் நடத்தினால் தற்பாதுகாப்புக்காகப் புலிகளும் திருப்பிததாக்கும் நிலைக்குத் தள்ளப்படுவர் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(தி-18)

# இ.தொ. காங்கிரஸ் கட்சி

# அரசுடன் இணையும் சாத்தியம்

(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்துடன் அடுத்த வாரத்தில் இணையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசுடன் இணையும் பட்சத்தில் இரு அமைச்சர் பதவிகளும் இரு பிரதியமைச்சர் பதவிகளும் அதறகு வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய தேசிய முன்னணியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினரான எம்.எஸ். செல்லச்சாமீ தோட்ட உட்கட்டமைப்பு மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சராகவும், முத்துசிவலிங்கம் விமானப்படைப் போக்குவரத்துத்துறை அமைச்சராகவும் பதவியேற்கவுளளனா.

இவர்களோடு இ.தொ.கா. வைச் சேர்ந்த மேலும் இருவருக்கு பிரதியமைச்சர் பதவிகள் வழங்கப்படவுள்ளன. கண்டி மாவட்டப் நாடாளுமன்ற உறுப்பினர் பைஸல் முஸ்தபா முஸ்லிம் விவகார பிரதியமைச்சராக நியமிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுவதோடு மற்றுமொரு பிரதியமைச்சராக வீ. புத்திரசிகாமணி நியமிக்கப்படலாம் என்றும் தெரியவருகின்றது.

அதேவேளை இ.தொ.கா. தலைவரும் நுவரெலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமான் தற்சமயம் எந்த அமைச்சுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லையெனத் தீர்மானித்துள்ளதாகவும் அறிய முடிகின்றது. வெளிநாடு சென்றுள்ள ஆறுமுகன் தொண்டமான் நாடு திரும்பியதும் அநேகமாக அமைசசர்களும் பிரதியமைச்சர்களும் சத்தியப் பிரமாணம் செய்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

(தி-18)

# இந்து சமயக் கண்காட்சி ஒகஸ்ட் மாதம் ஆரம்பம்

(கொழும்பு)

இந்துக்களிடையே இந்து சமய எழுச்சியை ஏற்படுத்து முகமாக இலங்கை சின்மய மிஷன் இலங்கையில் மாபெரும இந்துக்கண்காட்சிக்ளை 5 இடங்களில் நடாத்தவுள்ளதக இந்தியாவைச் சேர்ந்த இலங்கை சின்மய மிஷன் வதிவிட ஆச்சாரியார் ரமண சைத்தான்யா சுவாமிஜீ தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஹட்டன்,திருமலை மட்டககளப்பு, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் இவ் இந்து சமயக் கண்காட்சிகள் எழுச்சியுடன் நடாத்தப்படவுள்ளன. ஒவ்வொரு இடத்திலும் 4 நாட்கள் இக் கண்காட்சிகள் நடைபெறவுள்ளன.

இக்கண்காட்சியில் இந்து சமய கலாசாரம், இந்து சமயக் கொள்கைகள், தத்துவங்கள், மகான்களின் வாழக்கை அற்புதங்கள்,விஞ்ஞானமும்மெய்ஞானமும்,இந்து சமய வினோதங்கள், குருதேவரின் வாழ்க்கை என 6 பிரிவாகக் காட்சிப்படுத்தப்படவுள்ளன.

இக் கண்காட்சியில் மாணவர்களுக்கான இந்துசமயப்போட்டிகளும் நடத்தப்படவுள்ளன.

மாணவர்களுக்கான இப் போட்டிகளில் முதலாம் இடததைப பெறும் மாணவருக்கு 50 ஆயிரம் ரூபாவும் 2ஆம் இடத்தைப் பெறும் மாணவருக்கு 25ஆயிரம ரூபாவும் பரிசில்களாக வழங்கப்படவுள்ளன.

இவ் இந்து சமயக் கண்காட்சி யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 19ஆம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்தும் 4நாட்கள் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் முதலில் நடைபெறும் இவ் இந்துசமயக கண்காட்சி இவ்வருட முடிவிற்குள திருமலை, மட்டக்களப்பு, கொழும்பு, ஹட்டன் ஆகிய இடங்களிலும் நடாத்தப்படுமென இலங்கை சின்மய மிஷன் சுவாமி மேலும் தெரிவித்தார்.

(தி-52)

## நேர்முகப் பரீட்சை

(தொல்புரம்)

அரசாங்கத்துறையில் பொருத்தமான பதவிகளிற்கு பட்டதாரிகளை ஆட்சேர்த்தல் தொடர்பாக வலிமேற்கு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட தொழிலற்ற பட்டதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சை நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9.00மணி தொடக்கம் பிரதேச செயலகத்தில் நடை பெறவுள்ளது.

இந் நேர்முகப் பரீட்சைக்கு விண்ணப்பதாரிகள் தங்களின் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டுள்ள சானறிதழ் பிரதிகளின் மூலப்பிரதிகளினையும், பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, பட்டச்சானறிதழின் மூலப் பிரதி ஏனைய தகைமை சான்றிதழ்களின் மூலப பிரதிகளுடன் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள் (தி-70)

## இலங்கை-இந்திய

# பாதுகாப்பு உடன்படிக்கை தயாரிக்கப்பட்டு வருகின்றது

(கொழும்பு)

இலங்கைககும்-இந்தியாவுககும் இடையிலான உத்தேச பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கை தயாரிக்கபபட்டு வருவதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாதுகாப்பு ஒப்பந்தம் சம்பந்தமான நகல் வரைபுகள், சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கிடையே ஏற்கனவே பரிமாற்றஞ் செய்யப்பட்டுள்ளது.

இலங்கை-இந்திய நாடுகளின் இடையே ஏற்படுத்திக்கொள்ளவருக்கும் அரசியல் உடன்பாட்டை அடிப்படையாக வைத்து இந்த உடன்படிக்கை தொடர்பாக மேலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதேவேளை, இந்த உத்தேச பாதுகாப்பு ஒத்துழைப்பு உடனபடிக்கை மூலம் இந்தியாவிடம இருந்து, இலங்கை அரசு இராணுவ சாதனஙகளைப் பெற்றுக்கொள்வதோடு இராணுவ அதிகாரிகளுக்கு பயிற்சியைப் பெறும் வாய்ப்பையும் ஏற்படுத்திக்கொடுக்கும் எனத் தெரிவிக்கார்.

(60.10)

# செய்தித் துளிகள்

## நீலமாகிவரும் கடல் வெளியீடு

(புதுக்குடியிருப்பு)

முல்லை ஜேசுதாசனின் "நீலமாகிவரும் கடல்" நூல் வெளியீட்டு விழா நேற்றுமுன் தினம் முலலைத்தீவு மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றுள்ளது.

நிதர்சனம் பிரிவைச் சேர்ந்த போராளி வீரா தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில் பொதுச் சுடரினை பிரபல் ஓவியர் புகழேந்தி மற்றும் ரி.ரி.என்னின் தாயக இணைப்பாளர் நகுலன் ஆகியோரும் தமிழீழத தேசியக் கொடியினை புலிகளின்குரல் பொறுப்பாளர் ந. தமிழன்பனும் ஏற்றி வைத்தனர்.

நூலின் வெளியீட்டு உரையினை தமிழீழ கலை பணபாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை நிகழ்த்தினார்.

நூலை புலிகளின் தளபதிகளுள ஒருவரான மங்களேஸ் வெளியிட்டு வைத்தார். நூலின் முதல் பிரதியை முல்லைத்தீவு உதவிக கல்விப் பணிப்பாளர் என்.சிவராஜா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்ச. கனகரட்ணமும் பெற்றுக்கொண்டனர்.

(தி-4,64)

## பிரான்பற்றுக்கு மின்சாரம் வழங்கக் கோரிக்கை

(சுதுமலை)

பண்டத்தரிப்பு பிரான்பற்று கிராமத்திற்கு மின்சார வசதியைச செய்து கொடுக்கும் படி கோரி யாழ். மாவட்ட தமிழ்க் கூட்டமைபபின் பாராளுமன்ற உறுப்பினர் ந. ரவிராஜ இலங்கை மின்சாரசபையின் பொது முகாமையாளருக்கு அவசர கடிதம் ஒன்றை கடந்தவாரம் அனுப்பியுள்ளார்.

கடந்த பல வருடங்களாக மின்சார வசதிகள் இல்லாது இக்கிராம மக்கள் பல இடையூறுக்கு மத்தியில் வசித்து வருவதாகவும இதனால் இப்பகுதியில் கல்வி கற்கும் மாணவர்கள், வைத்தியசாலை, ஆலயங்கள மற்றும் தொழில்நிறுவனங்கள பாதிக்கப்பட்டு வருவதாகவும் இவ்விடயம் தொடர்பாக பலகடிதங்களை பாதிக்கப்பட்டவர்கள் தமக்கு எழுதியிருப்பதாகவும் அவர் அக் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

(உ-252)

## சிற்றூர்திச் சேவை

(யாழ்ப்பாணம்)

பயணிகளின் வேண்டுகோளுக கமைய எதிர்வரும் முதலாம் திகதி தொடக்கம் சுன்னாகத்திலிருந்து உடுவில், மானிப்பாய், தாவடி ஊடாக யாழ்ப்பாணம் 771 பாதையிலும், சுன்னாகம்- சாவகச்சேரி 775 பாதையிலும்சிற்றூர்திகள் சேவையில ஈடுபடவுள்ளன.

(தி)

## முன்பள்ளி சிறார்களிடையே பற்சூத்தை நோய்

(சுதுமலை)

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் கீழ் உள்ள பிரான்பற்று மற்றும் சாந்தை ஆகிய கிராமங்களில் உள்ள முன்பள்ளிச் சிறுவர்களிடையே நிலவும் பற்சூத்தையின் தாக்கத்தைக் குறைப்பதற்கு விரைவில் நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளதாக பிரதேச உள்ளூராட்சி உதவியாளர் செ.ரமேஸ் தெரிவித்தார்.

இப்பகுதிகளில் மேற்கொண்ட ஆய்வின் பிரகாரம் சுமார் 8ற்கும் மேற்பட்ட முன்பள்ளிகளில் பயிலும் 60ற்கும் மேற்பட்ட சிறுவர்களில் பற்குறைபாடுகள் இருப்பது தெரியவந்துள்ளது.

இதனை நிவிர்த்தி செய்வதற்கு வசதியாக பற்பசை,பற்தூரிகை என்பவற்றை முதலில் வழங்கி சரியான முறையில் சிறுவர்களிடையே பல் துலக்கும் பழக்கத்தை ஏற்படுத்த முடியும என நம்பப்படுகிறது.

(உ-252)

## அப்பியாசக் கொப்பிகள் அன்பளிப்பு

(கோப்பாய்)

வலி.கிழக்கு தேசிய எழுச்சிப் பேரவை, மாணவர் பேரவை ஆகியவை இணைந்து இருபாலை கதிரொளி சனசமூக நிலையம், இராச வீதி இராஜன் சனசமூகநிலையம் ஆகியவற்றை உள்ளடக்கிய பாடசாலை மாணவர்களின் கற்றலை மேம்படுத்தும்வகையில்ஒரு தொகை அப்பியாசக் கொப்பியையும் பெற்றோல் மாக்ஸையும்வழங்கியுள்ளன.

(உ-79)

## வருடாந்த உற்சவம்

(பொன்னாலை)

அராலி கிழக்கு- ஆவாரம்பிட்டி ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து 10 நாட்கள் நடைபெற்று வரும் உற்சவங்களில் ஒன்பதாம் நாள் பொங்கல்மடை பூசைகளுடன் மஹோற்சவம் நிறைவு பெறும்.

(தி-49)

## இளைஞன் படுகாயம்

(தம்பசிட்டி)

நீர்வேலியில் உள்ள கல்லுடைககும் இந்திரத்திற்கு ஒயில ஊற்றச சென்ற இளைஞன் இயந்திரப் பட்டியில் சிக்குண்டு படுகாயமடைந்த நிலையில் யாழ்போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் படடுள்ளார்.

சிறுப்பிட்டியைச் சேர்ந்த அமுதன் அகிலன் (வயது 23) என்ற நபரே இவ்வாறு படுகாயமடைநதவராவார்.

(தி-45)

## பெற்றோர் தினவிழா

(கோப்பாய்)

உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயத்தின் பெற்றோர் தின விழா எதிர்வரும் 3ஆம் திகதி விழாயக்கிழமை பி.ப 3.00 மணிக்கு வித்தியாலய அதிபர் சு. யோகராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வல் விருநதினர்களாக யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினா மா.க. ஈழவேந்தன் பிரதிக்கல்விப் பணிபபாளர் செல்வி சறோஜினி தேவநாயகம், கோப்பாய்க கோட்டக கல்விப் பணிப்பாளர் இ. சிவஞான சுந்தரம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளார்.

(உ-79)

## விண்ணப்பம் கோரல்

(காரைநகர்)

யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தின் நிதியுதவியுடன் ஆசிய ஜப்பானிய உறவுப்பால நிறுவனமும் கிராமியப் பொருளாதாரக் கல்வி ஆய்வு அபிவிருத்தி நிறுவனமும் இணைந்து 155ஆம் மைல்கல், ஏ-9 வீதி கிளிநொச்சியில் அமைந்துள்ள தொழில பயிற்சி நிலையத்தில் நடாத்தும் தொழில் பயிற்சிக்கான விண்ணபங்கள் கோரப்பட்டுள்ளன.

உழவு இயந்திரம் திருத்தல், தளபாடம் அமைத்தல், தையல் பயிற்சி ஆகிய பயிற்சிநெறிகளிற்கே தற்போது விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

(உ-246)

## பலப்படுத்தப்படும் காவலரண்

(பொன்னாலை)

புன்னாலைக்கட்டுவன் வடக்குப் பகுதியில் அமைந்துள்ள இராணுவ காவலரண பலப்படுத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

புதிய முட்கம்பிவேலிகள்,மண் மூடைகள் சகிதம் பலப்படுத்தபட்டு வரும் இக் காவலரண் பகுதியில் "பரண்" காவல் நிலையமும் மேலும் நீண்ட மறைப்புச் சுற்று வேலிகளும் அமைக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, புன்னாலைக் கட்டுவன் தெற்குச் சந்திப் பகுதியில் அமைந்திருந்த இராணுவக் காவலரண் அகற்றப்பட்டதையடுத்தே மேற்படி காவலரண் பலப்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(தி-49)

# யாழ்ப்பாணக் குடும்ப- சமூக கலாசார பண்பாட்டு உறவுகளைப் பலவீனப்படுத்தும் தொலைக்காட்சித் தொடர் நாடகங்கள்

**விவாத அரங்கு**

**தொலைக்காட்சியில் தொடராக இடம் பெறும் நாடகங்களினால் யாழ்ப்பாணக் குடும்ப- சமூக கலாசார பண்பாட்டு உறவுகள் பலப்படுகின்றதா? பலவீனப்படுகின்றதா?**

*என்ற தலைப்பிற்கு ''பலவீனப்படுகின்றது'' என்ற தலைப்பின் கீழ் வ.சின்னப்பா தன் வாதப் பிரதிவாதத்தினை முன்வைக்கிறார்.*

வ.சின்னப்பா
ஓய்வுபெற்ற அதிபர்,
தனங்கிளப்பு.

தொலைக்காட்சித் தொடராக இடம்பெறும் நாடகங்களினால் யாழ்ப்பாணக் குடும்ப - சமூக- கலாசார- உறவுகள் முற்றாகச் சீரழிந்து விடுகின்றன என்று சொன்னால், சிலவேளை அவ்வாக்கியம் சற்றே தவறென்று கொண்டாலும், கொடுக்கப்பட்ட தலைப்பிற்கேற்ப அவைகளால் சமூக -கலாசார- பண்பாட்டு- உறவுகள் பலவீனப்படுகின்றன என்று சொல்லுவது நூற்றுக்கு நூறு வீதம் உண்மையாகும். நல்லது, கெட்டதை பகுத்து உணரக் கூடிய பெரியவர்களை எந்த நாடகங்களினாலும் இலேசில் திசை திருப்ப முடியாது. ஆனால், இளம் வயதினர் இத்தகைய நாடகங்களினால் இலகுவில் எடுபட்டு விடுகின்றார்கள். பன்னாடையைப்போல அவர்கள் தீயவற்றை வடித்து எடுத்துக் கொண்டு நல்லவற்றை விட்டு விடுகிறார்கள். இவர்களது மனநிலை நாடகங்களை நாடகங்கலே என எண்ணாது நிஜமான சம்பவங்கலே மயங்க வைத்து விடுகின்றது. இவ்வாறு திசை திருப்பப் படுபவர்களினால் தான் சமூக- கலாசார-பண்பாட்டுச் சீரழிவுகள் ஏற்படுகின்றன. எனவே, இளைஞர், யுவதிகள் குறிப்பாக பள்ளி செல்லும் மாணவர்களை இந்தத் தொடர் நாடகங்கள் திசை திருப்புகின்றனவா என்று உற்று நோக்க வேண்டியது மிகமிக அவசியம். யாழ்ப்பாணத்திலே எண்ணெய் வளமும் இல்லை, இரும்பு வளமும் இல்லை, இரத்தினக் கற்களும் இங்கு விளைவதில்லை. யாழ்ப்பாண மக்களுக்குக் கைகொடுப்பது கல்வியொன்றேயாகும். இக்கல்வி சீரழிக்கப்பட்டால் அச்சீர்குலைவினால் குடும்ப சமூக -கலாசார -பண்பாட்டு விழுமியங்கள் பல வீணப்பட்டே தீரும் என்பதில் ஐயமேயில்லை.

கட்புல சாதனங்கள் தாம் மாணவர்களது கற்றலை வேகப்படுத்துகின்றன என்பது உளவியல் அறிஞர்கள் ஆய்வுகளின் மூலம் நிறுவிய பாரிய உண்மையாகும். இதை எல்லோரும் ஏற்றுக்கொள்வர். இதனாலேதான் ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்கள் கட்புல சாதனங்களை உபயோகிக்குமாறு வலியுறுத்தப்படுகின்றனர். ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளும் இதனையே வற்புறுத்துகின்றன. இந்த வகையில் நோக்கினால் நாடகங்களும் கட்புல சாதனங்களாகவே பயன்படுகின்றன. ஆதலால் நாடகங்களால் ஏற்படும் பதிவுகள் மிகவும் ஆழமானவையாக அமைகின்றன. கற்றல் என்று சொல்லும்போது அது பாடசாலையில் மாத்திரம் நிகழும் ஒன்று என்று எண்ணிவிடக் கூடாது. எம்மைச் சூழ நடைபெறும் எல்லா நிகழ்வுகளும் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளில் பங்கு கொள்கின்றன. அந்த வகையில் நாடகங்களும் பல நல்ல, தீய பதிவுகளை மாணவர்கள் மனதில் ஏற்படுத்துகின்றன. இவையே குடும்ப- சமூக - கலாசார- பண்பாட்டு உறவுகளில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

நன்மை, தீமைகள் சமுதாயத்தில் கலந்தே உள்ளன. கூடிய நன்மைகளை விளைவிக்கும் நிகழ்வுகள், நன்மை பயக்கும் நிகழ்வுகள் எனவும் அதிக தீமை பயக்கும் நிகழ்வுகள் தீங்கானவை என்றும் பெரியோர் வகுத்துச் சொல்வர்.

பொதுவாக எல்லா ''அன்ரனாக்கள்'' மூலமும் தெளிவா கப பார்க்கக்கூடிய சக்தி தொலைக்காட்சியில் வரும் ''காவியாஞ்சலி'' என்ற தொடர் நாடகத்திலே "ஒருவன் தப்புப் பண்ணினா, அதை ஒத்துக்கிற மனப்பான்மை அவனுக்கு இருக்கவேணும். அப்பதான் வாழ்க்கையிலே முன்னேறலாம்'' என்று அப்பா அருணுக்கு அறிவுரை கூறுகின்றார். அதுபோல ''நீ நான் அவள்'' என்ற தொடர் நாடகத்திலே, ''தப்புப் பண்ணாதவன் காயப்படமாட்டான'' என்று அப்பா சொல்கிறார். கூழுக்குப் பயறு போடுவதுபோல இப்படியாக வருகின்ற ஒரு சில காட்சிகளை வைத்துக்கொண்டு தொடர் நாடகங்கள் யாழ்ப்பாண குடும்ப- சமூக- கலாசார- பண்பாட்டு உறவுகளைப் பலப்படுத்துகின்றன என்று சொல்லாமா?

தொடர் நாடகங்களி வரும் சில தீய காட்சிகள் (அவை தொடர் நாடகங்களாக இருப்பதால்) நாடக முடிவில் நன்மைக்கு வித்திடுவனவாகக் கூட அமையலாம். ஆனால், அத்தகைய தீய நிகழ்ச்சிகளைப் பார்த்த உடனேயே பார்வையாளரின் உள்ளங்களில் தீய பதிவுகள் ஏற்பட்டுவிடுகின்றன. மனப்பதிவுகளை ஏற்படுத்த தொடர் நாடகம் முடியும் காலப்பகுதி வரை பார்வையாளரின் உள்ளங்கள் காத்திருப்பது இல்லை. அவ்வப்போது காணும் காட்சிகளால் அவ்வப்போதே பதிவுகள் ஏற்பட்டு விடுகின்றன. தீய காட்சிகள் தீய பதிவுகளை ஏற்படுத்தும் என்பதை மறுக்க முடியுமா?

''நீ நான் அவள்'' என்ற தொடர் நாடகத்திலே மகள், தந்தை தாயாருக்குத் தெரியாமலேயே பெரிய வைர ஆபரணத்தை விற்பதற்காக நகைக் கடைக்கு எடுத்துவந்து விடுகிறாள். இந்த அபாரத் துணிவு இளைஞர், யுவதிகள் மத்தியிலே யாழ்ப்பாணக் குடும்ப- சமூக- கலாசார உறவுகளை பாழ்படுத்தவே துணை புரியும் என்பதில் ஐயமில்லை. யாழ்ப்பாணத்தில் ஆபத்தில் கை கொடுப்பவை ஆபரணங்களே, அவற்றிலே கைவைக்கும் பழக்கம் ஏற்பட்டால் குடும்ப உறவு பாதிககப்படாதா? தாய் தந்தையரை தெய்வமாக மதித்து, தந்தை சொல்மிக்க மந்திரமில்லை என அடங்கி, ஆபாசச் செயல்களில் ஈடுபடாது இருப்பது யாழ்ப்பாணக் குடும்பங்களின் சமூக- கலாசார- குடும்பப் பண்பாடு. இந்த விழுமியங்களை உடைத்தெறியும் அளவுக்கு பல காட்சிகள் தொடர் நாடகஙகளில் காண்பிக்கப்படுகின்றன. ''குங்குமம்'' தொடர் நாடகத்தில் இளைஞர்கள் ஒளித்து மறைத்து சிகரெட்டை புகைத்து ரசிக்கும் காட்சிகள் காட்டப்படுகின்றன. மரியாதைக்குரியவர்கள் வந்ததும், சிகரெட்டைக் காலின் கீழ் போட்டு நசித்துவிட்டு, ஒன்றும் அறியாதவர் போலக் காட்டப்படுகிறது. இது யாழ் குடும்ப, சமூக உறவைப் பலப்படுத்துமா?

முன்குறிப்பிட்ட ''நீ நான் அவள்'' என்ற தொடர் நாடகத்திலே, சாதாரண புகைப்படங்களை, ஆபாசப் படங்களாக விருத்தி செய்து, அதை வைத்துக் கொண்டு பெருந் தொகைப் பணத்திற்குப் பேரம் பேசப்படுகிறது. இது யாழ்ப்பாண குடும்ப உறவுகளுக்கு ஒத்துவருமா? ஏதோ ஒரு வகையில் தன்னுடன் ஒத்துப் போகாத ஒரு யுவதியை இழிவுபடுத்தவேண்டுமென்றால், அவளின் முகத்திற்கு வேறு ஒரு பெண்ணின் ஆபாச உடற் புடத்தைப் பொருத்திப் படமாக்கி வெளியிடலாம் என்ற எண்ணம் இளைஞன் மனதில் தோன்றாதா? இப்படித் தோன்றினால் இது யாழ்ப்பாணக் குடும்ப கலாசார உறவுகளைப் பலப்படுத்துமா?

**சீர்துக்கின் தீமை கடலிற் பெரிது**

இன்னொரு தொடர் நாடகத்தில் அப்பாவையே கொலை செய்துவிட்டு, ஏதும் அறியாத அவரது மகளையே குற்றக் கூண்டில் நிறுத்திக் காட்டப்படுகிறது. இத்தகைய காட்சிப் பதிவுகள் பின்புலத்தில் பதிவாகி இருக்கும்போது ஏதாவது தேவைகள் கருதி இளைஞர்களை இத்தகைய செயல்களில் ஈடுபட அவை துாண்டுகோல்களாக அமையாதா? தொடர் நாடகம் ஒன்று முடிவடைந்து அடுத்த தொடர் நாடகம் ஆரம்பமாவதற்கு முன்னுள்ள இடை வேளையில் காட்டப்படும் விளம்பரங்கள், பாடல காட்சிகள் பார்வையாளனை திட்டமிட்டு பார்க்க வைக்கும் காட்சிகளாக அமைகின்றன. தொகைக்காட்சித் தொடர் நாடகங்களோடு சம்பந்தப்பட்டமையால் இவை பற்றியும் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. அண்மையில் சக்தி தொலைக் காட்சியில் இரு தொடர் நாடகங்களுக்கு இடையில் ''ஆடு மேய்கிறது'' என்று ஒரு பாடல் காட்சி காண்பிக்கப்பட்டது. இதன் பின்புலத்தில் ஒரு குழுவினர் ஆட, ஆரம்பத்தில் பிரதான பெண் பாத்திரம் சேலை யோடு ஆடினாள். பின்னர் "இத்தனை நாளா குடும்பம் நடத்திறாய் இது தெரியாத உனக்கு என்று பெண்பாடும் போது, அவளின் சோலையை இழுத்து உரித்து எடுத்து தலையில் முட்டாசாகக் கட்டிக் கொண்டு ஆண் ஆட, பெண் உள்ளாடையுடன் ஆடினாள். பின்னர் பெண்ணை ஆண் தூக்கி எடுத்துக் கொண்டார். பின்னர் முத்தமிடும் காட்சிகள். பின்னர் (வார்த்தையில் விபரிக்க முடியாத) தொ(ல்)லைக் காட்சி. இடைவேளையில் நாடக ரசிகர்களைப் பார்க்க வைக்கும், நாடகம் சார்ந்த இந்தக் காட்சிகளும் நிச்சயமாகவே யாழ்ப்பாணக் குடும்ப- கலாசார- பண்பாட்டு உறவுகளைப் பலவீனப் படுத்துகின்றன.

அது மட்டுமன்று, இத் தொடர் நாடகங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரங்களும் கல்வியைப் பாழ்படுத்துவதால் யாழ்ப்பாணக் குடும்ப- கலாசார- பண்பாட்டு உறவுகள் பலவீனப் படுகின்றன. சக்தி தொலைக் காட்சி சேவையை எடுத்துக் கொண்டால், பொதுவாகத் தொடர் நாடகங்களுக்கு வார நாட்களே ஒதுக்கப்பட்டிருக்கின்றன. அண்மைக்காலங்களில் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் தொடர் நாடகங்களுக்கு நேரம் ஒதுக்கப்படவில்லை. இதுமட்டுமன்று மாணவர்கள் வீட்டில் கற்கின்ற, இரவு 6.00 மணி முதல் 9.00 மணிவரையான நேரத்திலேயே பல தொடர்நாடகங்களுக்கு நேரம் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. உதாரணமாக மாலை 6.30 மணிக்கு 'குங்குமம்', 7.00 மணிக்கு 'காவியாஞ்சலி', 7.30 மணிக்கு 'நீ நான் அவள்', 8.30 மணிக்குச் 'சித்தி' 9.00 மணிக்கு ஒளிபரப்பு முடிவு.

9.00 மணி வரை இந்தத் தொடர் நாடகங்களைப் பார்த்த மாணவர், அந்த நினைப்போடு தொடர்ந்து படிப்பார்களா? இல்லை. இதனால் கல்வி பாழடைகிறது. கல்வி பாழடைந்தால கலாசாரம- பண்பாடு பாழடைகிறது. இவை இரண்டும் சீரழிந்தால் யாழ்ப்பாணக் குடும்பங்கள் நடுத்தெருவுக்கு வராதா? இந்தப் பொருத்தமில்லாத நேரங்களில், இந்தத் தொடர் நாடகங்கள் யாருக்காக ஒளிபரப்பப்படுகின்றன. இவை பெரியவர்களுக்காக ஒளிபரப்பப்படுகின்றன என்று கொண்டால், பெரியவர்கள் இதைப் பார்த்துக் கொண்டிருக்கும் போது, படிக்க வேண்டியவர்கள் படிப்பார்களா?

பொருத்தமான தொழில் வாய்ப்பின்றி, தேவைக்குக் கையிலே போதிய பணமும் இன்றி அதிக அங்கலாய்ப்புகளோடு இருக்கும் இளைஞர், யுவதிகள் பிறரது நெருக்குதல்களுக்கு உள்ளாகும்போது, நெறி பிறழ்வான பல நடத்தைக் கோலங்கள் அவர்களது உள்ளங்களிலே முகிழ்கின்றன. இத்தகைய நாடகத்தை மாற்றங்களுக்கு மேற்கூறிய தொடர் நாடகங்கள் களம் அமைத்துக் கொடுக்கின்றன என்றால் அது பிழையாகாது.

எனவே, தொலைக்காட்சியில் இடம்பெறும் தொடர் நாடகங்களினால் யாழ்ப்பாணக் குடும்ப- சமூக- கலாசார- பண்பாட்டு உறவுகள் பலவீனமடைகின்றன என்று ஆணித்தரமாகக் கூறலாம். ஒட்டு மொத்தமாகப் பார்க்கும்போது, நாம் காணும் தொலைக்காட்சி நாடகங்கள், சீர்துாக்கின் தீமை கடலிற் பெரிது. □

மீண்டும் உங்கள் வலம்புரியில்
விவாத அரங்கு
விடயம்
தொலைக்காட்சியில் தொடராக இடம் பெறும் நாடகங்களினால் யாழ்ப்பாணக் குடும்ப-சமூக கலாசார பண்பாட்டு உறவுகள்
பலப்படுகின்றது
பலவீனப்படுகின்றது
உங்கள் கருத்துக்களை
விவாத அரங்கு
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு
யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு விரைவாக அனுப்பிவையுங்கள்

# பாகிஸ்தான் ஏவுகணை சோதனை இந்திய மக்கள் பெரும் அச்சம்

(இஸ்லாமபாத்)

இந்தியாவில் உள்ள பல நகரங்களையும் தாக்கக் கூடிய காவ்ரி ஏவுகணையை பாகிஸ்தான் விண்ணில ஏவிச்சோதனை செய்துள்ளது.


இந்தியாவில் உள்ள பல பெரு நகரங்களையும் தாக்கி அழிக்கக் கூடிய, அணு ஆயுதங்களைச சும ந்து கொண்டு சுமார் 1500 கி.மீ தூரத்திற்குப் பாய்ந்து சென்று அழிக கவல்ல காவ்ரி (ஹட்ப்-5) என்னும் சக்தி வாய்ந்த ஏவுகணையை நேற்று முன் தினம் பாகிஸ்தான் விண்ணல் ஏவி சோதித்துப் பார்த்துள்ளது.

இந்தியாவில் காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி பதவிக்கு வநது ஒரு வாரம் ஆகியுள்ள நிலையில், பாகிஸ்தானின் காவ்ரி அணு ஆயுத ஏவுகணைச் சோதனை இந்தியாவை பெரும் பரபரப்புக்கு உள்ளாக்கியிருக்கிது.

இந்த அணுஆயுத ஏவுகணைச் சோதனை, ஏவுகணை தொழில் நுட்பத்தில் உள்ள வளர்ச்சி நிலைகளை மேம்படுத்துவதற்காகவே சோதித்துப்பார்க்கப்பட்டது என்றும்,திடீர் அணு ஆயுத ஏவுகணைச் சோதனைக்கு வேறு எந்த உள் நோக்கமும் இல்லை என்றும் பாகிஸ்தான் இராணுவச் செய்தித் தொடர்பாளர் மேஜர் ஜெனரல் சௌகத்சுல தான் தெரிவித்துள்ளார்.

மேலும் பாகிஸ்தானிய தொழில நுட்ப முறைப்படி பாகிஸ்தானிலேயே தயாரிக்கப்பட்ட இந்த ஏவுகணையின் சோதனை தற்போது வெற்றிகரமாக செய்து முடிக்கப் பட்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஏவுகணைச் சோதனை நடத்தப்பட்ட இடத்தைக் குறித்து எதுவும் குறிப்பிட மறுத்த சூல்தான் ஏவுகணையின் சோதனைத்




தூரமும், அதன் தாக்குதல் புள்ளியும் பாகிஸ்தானுக்குள்ளே இருக்குமாறு சோதித்துப் பார்க்கப் பட்டுள்ளது,

பாகிஸ்தான் பிரதமர் ஜப ரூல்லா கான் ஜமாலி, இரணுவத் தளபதிகளின் உயர் மட்டக்குழு தலைவர் ஜனரல் அஸிஸ் க்கான், மற்றும் இராணுவ அதிகாரிகளின் முன் நிலை யில் இந்த அணு ஆயுத ஏவுகணைச் சோதனை நடததப்பட்டது எனவும் அவர் தொிவிததுள்ளார்.

இந்தக் காவ்ரி அணு ஆயுத ஏவுகணைச் சோதனை நடத்துவது குறித்து சட்டப்படி முன்கூட்டியே அண்டை நாடுகளுக்குத் தகவல் தெரிவித்து விட்டதாக குறிப்பிட்ட அவர், நம்பிக்கை ஏற்படுத்தக் கூடிய அடிப்படையிலேயே இந்தத் தகவல அண்டை நாடுகளுக்கு தெரிவிக்கப்பட்டதாகவும் கூறினார்.

ஆனால் இந்தியாவைப் பற்றி அவர் எதுவும் குறிப்பிடவில்லை இந்த அணுஆயுத ஏவுகணை சோதனையைப் பார்த்து ரசித்த பாகிஸ்தான் பிரதமர் ஜமாலி அணு ஆயுத் தொழில் நுட்ப வல்லுநர்களுக்கும், விஞ்ஞானிகளுக்கும் வாழ்த்துத் தெரிவித்ததோடு குறைந்த பட்சத் தடுப்பு நடவடிக்கையை நிர்வகிக்கவும், தொழில் நுட்ப எல்லையை விரிவு படுத்தவும் அரசு முயறசி எடுக்கும் எனத் தெரிவித்துள்ளார்.

பிரதமர் வாஜ்பாய் ஆட்சியில் இருந்தபோது இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே சமாதான முயச்சியை வலுப படுத்தும் விதமாக பஸ் மற்றும் ரயில் போக்கு வரத்து ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஹீரியத் மாநாட்டுத் தலைவர்களுடன் கூடிப் பேசி காஷமீர் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வுகாண முயன்றார்.

மேலும் இந்திய கிரிக்கெட் வீரர்களை பாகிஸ்தானுக்கு அனுப்பிவிளையாட்டுத் துறையில் புதிய உறவுப்பாலம் அமைத்தார்.

இந் நிலையில் மனமோகன் சிங் தலைமையிலான புதிய அரசு பதவியேற்றஒருவாரத்திற்கிடையே பாகிஸ்தான் இந்தியாவின் உள்ள பல நகரங்களையும் தாக்கக் கூடிய அணுவாயுத ஏவுகணைச் சோதனை செய்து பார்த்துள்ளமை இந்திய மக்களை அச்சத்தில் ஆழ்த்தியுளளது. (18)



மேற்கு ஆப்கானிஸ்தானில் தலிபான்களுக்கு எதிராகத் தாக்குதலில் ஈடுபட்டிருக்கும் யு.எஸ். போர் வீரர்கள்.

# ஈரானில் நில நடுக்கம் உயிரிழப்பு 45 பேராக உயர்வு

(தெஹ்ரான்)

ஈரானில ஏற்பட்ட நிலநடுக்கத்தில் பலியானவர்களின் எண்ணிக்கை 45ஆக உயர்ந்துள்ளது 400பேர் காயமடைந்



துள்ளனர். ஈரான் தலைநகர் டெக்ரானின் வடக்கில் உள்ள மாகாணங்கள் குவாஸ்வின் மற்றும் மசந்தரான். இங்கு கடந்த வெள்ளி ஏற்பட்ட நில நடுக்கத்திற்கு பலியானவர்களின் எண்ணிக்கை 45 ஆக உயர்ந்துள்ளது. 400 பேர் காயமடைந்துள்ளனர். நில நடுக்கம் நடந்த மாகாணங்கள் மலைப் பிரதேசத்தை யொட்டி அமைந்துள்ளன ஈரானின் அதிகாரப,ர்வ செய்தி ஏஜென்சியான ஐ.எஸ்.ஏ. பலியானவாகளின் எண்ணிக்கை 45என்று கூறினாலும், அந்நாட்டு ரேடியோ 25பேர் பலியானதாகவும், 200பேர் காயமடைந்ததாகவும் அறிவித்துள்ளது.

இந்த நில நடுக்கம் ரிக்டர் அளவில் 6.1ஆகஇருந்ததாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. டெஹ்ரானின் வடக்கே 70 கிமீற்றர் தொலைவில் மசந்தரான் மாகாணத்தில் உள்ள பாலாடே என்ற இடத்தில் நில நடுக்கம மையம் கொண்டிருந்தது. டெக்ரான் பல்கலைக்கழக புவியியல் ஆராய்ச்சி மையத்தில்1.6 முதல் 5.5 ரிக்டர் அளவில் 65 முறை பலவேறு அளவுகளில் நில நடுக்கம் ஏற்பட்டதாக பதிவாகியுள்ளது. கடந்த ஆண்டு டிசம்பர் 6ஆம் திகதி பாம் என்ற இடத்தில் ஏற்பட்ட நில நடுக்கத்திற்கு சுமார். 30 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் பலியானார்கள் அதற்குப் பின்னர் ஏற்பட்டுள்ள இரண்டாவது பெரிய பூகம்பம் இதுவாகும்.

# சிங்கப்பூர் துறை முகத்தில் 5 இந்தியர் உட்பட 7 பேர் பலி

(சிங்கப்பூர்)

சிங்கப்பூரில் உள்ள கப்பல் சீரமைக்கும் துறைமுகத்தில் போர்த்துக்கல் நாட்டுக் கப்பலில் ஏற்பட்ட தீவிபத்தில் சிக்கி 5 இந்தியர்கள் உற்பட 7 பேர் பரிதாபமாக இறந்தனர்.

சிங்கப்பூரில் உள்ள கப்பல் சீரமைக்கும் பகுதியில் செயல் இயக்குநர் நெலசன் ஜென் இதனைத் தெரிவித்தார்.

சிங்கப்பூர் கப்பல் காப்பிரேசனின் கப்பல் சீரமைக்கும் துறை முகத்தில் போர்த்துக்கல் நாட்டு கப்பலுக்குத் திருத்தம் பார்க்கும் பணி நடந்து வந்தது. அவ் எண்ணெய் கப்பலல் ஸடீல் மாற்றும் வேலை நடந்து கொண்டிருந்தது. இந்நிலையில,


கப்பலின் வலப்பக்கத்தில் திடீர்என் தீபிடித்தது. அப்போது அங்கிருந்தவர்களில் 7பேர் தீயில் சிக்கி இறந்தனர். அவர்கள் வாசூன் மெரைன தனியார் நிறுவனத்தைச் சேர்ந்த சப்கான்ராக்ட் ஊழியர்கள். இவர்களில் 5 பேர் இந்தியர்கள் 2பேர் மலேசியர்கள்.

இந்த விபத்து மின் கசிவினால் ஏற்பட்ட விபத்தாக இருந்தால் அது குறித்து மிகவும் எச்சரிக்கையாக விசாரணை நடத்தப்படும். இவ்வாறு நெல்சன் ஜென் கூறினார்.

மின்கசிவால் விபத்து ஏற்பட்டிருந்தால் கடந்த 39 நாட்களில் சிங்கப்பூர் தொழிற்சாலையில் மூன்றாவது முறையாக நடக்கும் விபத்து இது என்பது குறிப்பிடத்தக்கது.



அமெரிக்காவின் ஸ்பிட்சர் டெலஸ்கோப் மூலம் விண்வெளியில் புதிய கிரகம் ஒன்று அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த புதிய கிரகம் வயதில் சிறியது. இதன் வயது 10 இலட்சம் ஆண்டுகள் ஆகும். எனவே, இதனைக் குழந்தைக் கிரகம் என்றும், இளைய கிரகம் என்றும் அழைக்கின்றார்கள்.




# ஜப்பானில் நிலநடுக்கம் டோக்கியோ நகர் குலுங்கியது

(டோக்கியோ)

ஜப்பானில் நேற்று முன்தினம் ரிக்டஸ் 5.9அளவிற்கு நில நடுக்கம் ஏற்பட்டது. இதனால் டோக்கியோ நகரம் குலுங்கியது.

ஜப்பானில் வடகிழக்கு மற்றும் கிழக்குப் பகுதியில் நேற்று முன் தினம் மதியம் நிலநடுக்கம் ஏற்பட்டது. உள்ளூர் நேரப்படி மதியம் 12.47 மணிக்கு கடற்கரை நகரான புகுஷிமா எனும் பகுதியில் நில நடுக்கம் மையம் கொண்டிருந்தது. ரிக்டர் அளவு கோலில் 5.9 எனும் அளவுக்கு நிலநடுக்கம் ஏற்புட்டது. மக்கள் நில நடுக்கத்தை உணர்ந்து வீடு, அலுவலகத்தை விட்டு வெளிவே ஒடிவந்தனர். மேலும், இருக்கும் இடங்களிலேயே பாதுகாப்பாக உயிர்தப்புவது எப்பிடி என்ற பழக்கத்தையும் பின்னபற்றினர். இதேபோல நிலநடுக்கத்தால் டோக்கியோ நகரம் குலுங்கியது. இதனால் ஏற்பட்ட சொத்துப் பாதிப்பு அல்லது பொதுமக்களுக்கு எற்பட்டகாயம் குறித்து உடனடித் தகவல் எதுவும் கிடைக்கவில்லை. ஜப்பரன் நகரில் ஏற்படும் நில நடுக்கத்தை 7 நிலை அளவுகளில் மதிப்பிடுவது வழக்கம். இதில் 7வது நிலை அளவு என்பது மிகவும் ஆபத்தான நில நடுக்கம் என்பதாகும் நேற்று முன்தினம் ஏற்பட்ட நில நடுக்கத்தின் அளவு இந்த வரிசையில் மூன்றாம் அளவாக மதிப்பிடப் பட்டுள்ளது என்று ஜப்பானில் 'இருந்து ஒளிபரப்பாகும் என்.எச்.கே.டி.வி அறிவித்துள்ளது.

# ஆண்களின் மலட்டுத் தன்மை நீங்க சிங்கப்பூரின் அற்புதக் கண்டுபிடிப்பு

ஆடவர் மலட்டுத் தன்மையை நீக்க உதவக் கூடிய அறிவியல் வழி முறையை சிங்கப்பூர் தேசியப் பல் கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆராச்சியாளார்கள் கண்டு பிடித்துள்ளனர்.


சோதனைக் குழாய் குழந்தைகளைத்தான் இதுவரை பார்த்து வந்திருக்கிறோம. சோதனைக் குழாய் ஆண் விந்தணுவை உருவாக்கியுள்ளனர் சிங்கப்பூர் ஆராய்ச்சியாளர்கள்.

ஹாங் யுன்ஹான் என்ற பேராசிரியர் தலைமையிலான ஆய்வாளர்கள் குழு இந்த அரிய கண்டுபிடிப்பை நிகழ்த்தியிருக்கிறது.

இதை முதலில் மெடாகா என்ற மீன்களைக் கொண்டு சாதித்திருக்கிறார்கள்.இந்த மீன்கள் அதிக பட்சம் 4சென்டி மீட்டர் உயரம் தான் இருக்கும் சுத்த நீரில் மட்டுமே இவை காணப்படும்.

மெடாகா வகை மீன்களின் உற்பத்தியைப் பெருக்க அவற்றின் ஆண்விந்தணுவைச் சோதனைக் குழாயில் வளர்ந்து சாதனை படைத்துள்ளனர். இதே தொழில் நுட்பத்தைத் தாவரங்கலிலும் பயன் படுத்தலாம் அது மட்டுமில்லாமல் பாலூட்டிகளின் இனங்களிலும் அதிலும குறிப்பாக மனித இனத்திலும் பயன்னடுத்த முடியும்.

பிள்ளையைத் தர முடியாத மலடு என்று எந்த ஆணும் இனி வருந்த வேண்டாம். இந்தத் தொழில் நுட்பம் மனிதர்களுக்கும் பயன் பட ஆரம்பித்துவிட்டால் கருங் குரங்கு லேகியங்களின் விற்பனை சரிந்துவிடும் என்று நம்பலாம்.



ஜோர்தான் நாட்டின் பட்டத்து இளவரசர் ஹெம்சாவுக்கு இளவரசி நூருக்கு நேற்று முன்தினம் அகாபா நகரில் உள்ள நட்சத்திர ஹோட்டலில் திருமணம் நடைபெற்றது. பிரமாண்டமான கேக்கை வாள் மூலம் வெட்டி மகிழ்ச்சியுடன் மணவிழா கொண்டாடுகிறார் ஜோர்தான் இளவரசி.

துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை - குறள்

வலம்புரி

# பிரிந்து செல்ல அனுமதிப்பதே ஒரே வழியாகும்...

சமாதான முயற்சிகள் மீண்டும் ஆரம்பமாகக் கூடிய சாத்தியக் கூறுகள் இல்லாதிருப்பதை உணர முடிகிறது. ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்து ஆட்சி நடத்தும் ஜனாதிபதி சந்திரிகா தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, சமாதான முயற்சிகளில் எந்த முடிபையும் எடுக்க முடியாமல் திண்டாடுகின்றது. இதனால் சமாதான முயற்சியில் அனுசரணையாளராகச் செயற்பட்ட நோர்வேத் தூதுவர் எரிக்சோல் ஹெய்ம் மனவிரக்தியோடு நாடு திரும்பியுள்ளார்.

விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட அடிப்படை விடயங்களில் இணக்கப்பாட்டை எட்டுவதிலேயே சிக்கல்களை எதிர் நோக்குகின்ற வேளையில், இடைக்கால நிர்வாக ஆட்சி, நிரந்தரத் தீர்வு என்ற கட்டங்கள் நடைமுறைச்சாத்தியமாவது எப்போது என்ற கேள்வி இலங்கை மக்களிடம் ஏற்பட விட்டாலும், நோர்வேயிடம் ஏற்பட்டிருக்கும் என்பதையாவது மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இதேவேளை விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுக்களை நடத்திய ஐக்கிய தேசியக் கட்சியும் புதிய அரசின் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு தர மறுத்துவிட்டது.

இத்தகவலை முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

அதாவது, ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் இருந்து பிரச்சினையைத் தீர்ப்பதாக இருந்தால் மட்டுமே நாட்டில் சமாதானம் ஏற்பட வேண்டும். மாறாக, ஐக்கிய தேசியக் கட்சி எதிர்க்கட்சி வரிசையில் இருக்க, இன்னொரு கட்சி ஆட்சியில் இருந்து கொண்டு சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் போது அதற்கு ஆதரவு வழங்குவது எதிர்க்கட்சியின் கடமையல்ல என்ற பொருள் பட ஜி.எல்.பீரிஸின் கருத்து அமைந்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில் அரச தரப்பிற்குத் தலைமை தாங்கி விடுதலைப் புலிகளுடன் ஆறு சுற்றுப் பேச்சுக்களை நடத்திய பேராசிரியர் பீரிஸ் தெரிவித்த கருத்தை உலக நாடுகள் சீர்தூக்கி ஆராயவேண்டும்.

சமாதானத்தை என்ன விலை கொடுத்தும் ஏற்படுத்துவேன் எனக் கூறிய முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் கட்சியின் பொறுப்பு வாய்ந்த ஒருவர் புதிய அரசின் சமாதான முயற்சிக்கு நாம் ஆதரவு அளிக்க மாட்டடோமெனக் கூறியதன் மூலம் சிங்களப் பேரினவாதத்தின் கோர வடிவம் ஆட்சியில் இருக்கும் போது மட்டும் மறைவு ஸ்தானத்தில் இருப்பதையும், எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்தவுடன் அது மேலெழுவதையும் இலங்கை அரசியல் வரலாற்றின் சாதாரண நிகழ்வு என்பதை நோர்வே உள்ளிட்ட இலங்கை விவகாரத்தில் தொடர்புடைய நாடுகள் தற்போதாவது உணர்ந்து கொள்ளுமென நம்பலாம்.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டுமெனக் கூறி விடுதலைப் புலிகளுடன் யுத்த நிறுத்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ஏற்படுத்தி சமாதானத்தின் பிதாமகர் என தன்னை அறிமுகப்படுத்திய முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாடே இதுவெனில், தலைமுதல் கால்வரை பேரினவாத நஞ்சைப் பூசிக் கொண்டு திரியும் ஜே.வி.பி, ஹெல உறுமய போன்ற சிங்களக் கட்சிகளன நிலைப்பாடு எதுவாக இருக்கும் என்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

ஆக, தமிழர்களின் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு சிங்களத் தலைமைகள் எதுவுமே முன்வரப் போவதில்லை என்பதால், தமிழர்கள் பிரிந்து சென்று தமக்கென்ற தனியாட்சியை அமைக்க உதவுவதே உலக நாடுகளின் கடமையாக இருக்கும். இதனை உலக நாடுகள் தலையீட்டுச் செய்வதற்கு முன்னதாக, சிங்கள மக்கள் தாமாகவே முன்வந்து தமிழ் மக்களை பிரிந்து செல்ல அனுமதிக்க வேண்டும். இதனைச் செய்ய சிங்கள மக்கள் தவறுவார்களாயின்-அதே தவறை உலக நாடுகளும் விடுமாயின், ஈழத் தமிழ் மக்கள் தாமாகவே பிரிந்து சென்று தமது ஆட்சிப் பரப்பை நிர்ணயம் செய்யும் காலம் விரைவில் உருவாகும்.

# பாதுகாப்பு வலயங்களைத் தக்கவைக்க படைக்கு எந்தவித நியாயாதிக்கமும் இல்லை

## மனிதநேய அமைப்புக்கள் ஜனாதிபதிக்கு மகஜர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடாநாட்டில், பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்கு வெளியே பல நூற்றுக்கான வீடுகளையும், பொதுக் கட்டடங்களையும் படையினர் இன்னமும் தமது பாவனையில் வைத்திருக்கின்றனர். புரிந் [illegible] [illegible]ன்படிக்கையின் பிரகாரம் இவற்றில் இருந்து படையினர் தாமாகவே வெளியேறி இருக்க வேண்டும். ஆயினும் இன்னமும் இது இடம்பெறவில்லை. இவற்றுக்கான வாடகைப் பாக்கி கூட வழங்கப்படவில்லை.

இவ்வாறு யாழ்.மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம், ஜனாதிபதிக்கு நேற்றுமுன்தினம் அனுப்பிவைத்துள்ள மகஜரில் சுட்டிக்காட்டியுள்ளது.

அம் மகஜரில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

நாட்டில் அவசரகால நிலைமை இல்லாமல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து அதிஉயர் பாதுகாப்பு வலயத்தை வைததிருப்பதற்கு எத்தகைய சட்ட நியாயாதிக்கமும் இல்லாமல் போயுள்ளது. இருப்பினும், அரசாங்கம் இப்போது அதிஉயர் பாதுகாப்பு வலயததினை கட்டுப்பாட்டுப் பிரதேசம் என மொழி மாற்றம் செயதுள்ளது. புரிந்துணர்வு உடன்படிக்கை கடந்த 27மாதங்களாக நீடித்துவரும் நிலையில், பாதுகாப்புப் படையினர் பாதுகாப்பின்மை என்ற நிலைப்பாட்டின் அடிப்படையில் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் மீள் குடியமர்வை மறுத்து வருகின்றனர்.

இந்திய அமைதிப்படையானது யாழ்ப்பாணத்தைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்த வேளையில் எப்பகுதியையும் அதிஉயர் பாதுகாப்பு வலயம் என்ற ரீதியில் பிரகடனப்படுத்தி வைத்திருக்கவில்லை.

மேலும், யாழ்ப்பாண நகரத்தில் அமைந்திருக்கும் மின்சார நிலைய வீதி நீண்டகாலமாக படையினரின் கட்டுப்பாட்டில் வைககப்பட்டுள்ளது. இவ் வீதியானது ஸ்ரான்லி வீதிக்கான தொடர்பு வீதியாகும. இவ்வீதியைப் பாதுகாப்புப் படையினர் தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதால் நகர மையத்தில் போக்குவரத்து நெரிசல் அதிகரித்த நிலையே உள்ளது.

இதனால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட்டுவருகின்றன. அத்துடன இவ் வீதியில் அமைந்துள்ள பல தனியார் இருப்பிடங்களும், பொதுப் பாவனைக் கட்டடங்களும் படையினரின் பாவனையில் இருக்கின்றன. இதனால் மீள் குடியமர்வு மறுக்கப்பட்டுள்ளது.

பொது மக்களின் சுலபமான போக்குவரததுக்கும், பொருட்களின் வருகைககுமாக வேண்டி ஏ-9பாதையை 24மணிநேரமும் பாவனையில் அனுமதிக்க உரிய ஏற்பாடுகள் உடன் செய்யப்பட வேண்டும்.

இது இவ்விதமிருக்க உள்ளூரில் இடம்பெயர்ந்தவர்களையும், அகதிகளையும் அவர்களின் சொந்த இருபபிடங்களில் மீள்குடியமர்த்த அர்த்தமுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். இதன்மூலம் மீளக்குடியமர்த்தப்படுபவர்களின் தொழில் வாய்ப்புக்களுக்கும் நாளாந்த வாழ்க்கைக்கும் வழிகள் ஏற்படுத்தப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-16)

# தொழிற்சங்கப் பாடசாலை அமைக்க அமைச்சு முயர்ச்சி

(கொழும்பு)

தொழில் கொள்வோரினதும் ஊழியர்களினதும் மனப்போக்குகளை மாற்றி சிறந்த கைத்தொழில் உறவுகளை விருத்தி செய்யும் வகையில் தொழிற்சங்கப் பாடசாலை ஒன்றை அமைக்க வேலைவாய்ப்பு மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் அதாவுட செனிவிரத்தின நடவடிக்கை எடுத்துள்ளார்.

இது தொடர்பாக அமைச்சர் அதாவுட செனிவிரத்தின ஊடகம் ஒன்றிற்கு கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த ஆண்டில் வேலை நிறுத்தப் போராட்டங்கள் அதிகரித்திருந்தன. இவ்வாண்டில் போராட்டங்கள் குறைவாக இருந்தாலும் முற்றாக இடம்பெறாமலில்லை.

இந்தப் போராட்டங்களில் அரச துறையைச் சேர்ந்தவர்களே அதிகம் ஈடுபடுகின்றனர்.

இதனால் தொழிற்சங்கப் பாடசாலை ஒன்றை அமைத்து அதன் மூலம் ஊழியர்களுக்கும் தொழில் கொள்வோருக்கும் இடையே ஏற்படும் பிணக்குகளுக்குத் தீர்வு கண்டு ஊழியர்கள் வேலை நிறுத்தங்களை நாடாதிருக்கும் நிலைமையை உருவாக்குவதற்கும்,

வடக்கு-கிழக்கு மாகாணம் உள்ளிட்ட நாட்டின் சகல பகுதிகளிலும் கருத்தரங்குகளை நடத்தி·தொழில் கொள்வோருக்கும், ஊழியர்களுக்கும் இடையிலான உறவுகளை விருத்தி செய்யவும் நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (தி-60,10)

# கண்ணி அகற்றும் பணியில் திருமலையில் டனிஸ் அமைப்பு

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் சர்வதேச கண்ணிவெடி அகற்றும் டனிஸ் அமைப்பினரால் மிதிவெடிகள் மற்றும் வெடிபொருட்கள் அகற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் கன்னியாய்க் கிராமத்தில் இதுவரை 118 மிதிவெடிகளும், திரியாய் கிராமத்தில் 200 மிதிவெடிகளும் மீட்கப்பட்டுள்ளதாக டனிஸ் அமைப்பின் திருகோண மலை மாவட்டத்திற்கான ஆலோசகர் ஜெஸ்அடம் தெரிவித்தார்.

அத்துடன் கும்புறுப்பிட்டி ,மொறவெவ ஆகிய பிரதேசங்களிலும் இவ்வாறான வெடிபொருட்கள் அபாயம் காணப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவிதார். (தி-4,61)

## ஓம் தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

வாழ்க்கையின் லட்சியம் என்ன? இந்த உலகம் தான் வாழ்க்கையின் லட்சியமா? வேறு ஒன்றும் இல்லையா? நாம இப்போது இருப்பது போல் தான் இருக்க வேண்டுமா? இதற்கு மேலாக இருக்க வேண்டாமா? எந்தத் தடையும் இல்லாமல சுலபமாக ஓடும் ஒரு இயந்திரமாக இருக்க வேண்டியவனா மனிதன் ?

சுவாமி விவேகானந்தர்

# அகில இலங்கை காந்தீய சேவா சங்கத்தைப் புனரமைக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

செயலிழந்திருந்த அகில இலங்கை காந்திய சேவா சங்கம் புனரமைபுச் செய்யப்படவுள்ளது.

சாந்திவழி, அகிம்சை, பண்பாடபாட்டுச் செல்நெறிகளில் சமுதாயத்தை வழிப்படுத்துவதை இலட்சியமாகக் கொண்ட இச் சங்கத்தின் பழைய அங்கத்தவர்களை "பிருந்தாவனம்" சிவபுரம் பூநகரிவழி என்ற முகவரிக்கு தத்தம் விலா சங்களை அனுப்பி வைக்குமாறு அதன் ஸ்தாபக உறுப்பினரான சோ.க.தம்பையா அறிவிததுள்ளார்.

இதேவேளை, மேற்படி சங்கததில் சமூகத் தொண்டர்களாகப் பணிபுரிய 20பட்டதாரிகள் இணைததுக் கொள்ளப்படவுள்ளனர்.

இவர்களுக்கான ஓராண்டுப் பயிற்சியில், அறிமுறைப் பயிற்சி விரிவுரைகள் யாழ்ப்பாணத்திலும் செயல்முறைக் களப் பயிற்சி பூநகரி, சிவப்புரத்திலும் நடைபெறவுள்ளது.

இப் பதவிக்கான விண்ணப்ப படிவங்களை 'குமாரவாசம்' கேணியடி ஒழுஙகை கொக்குவில் மேற்கு எனும் முகவரியில் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# கொழும்பு-தூத்துக்குடி கப்பல் சேவையை ஆரம்பிக்குமாறு தமிழக முதல்வரிடம் வேண்டுகோள்

(கொழும்பு)

கொழும்புக்கும்,தூத்துக்குடிக்குமிடையிலான கப்பல் சேவையை நடத்துவது தொடர்பாக அறிக்கை ஒன்றைத் தயாரித்து வழங்குமாறு இந்தியாவின் புதிய தரைவழிப் போக்குவரத்து, கப்பல் போக்குவரத்து அமைச்சர் டி. ஆர்.பாலு தமிழக முதல்வரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொழும்புக்கும்,தூத்துக்குடிக்குமிடையில் கப்பல் சேவை ஒன்றை நடத்துவதில் பல முட்டுக்கட்டைகள் ஏற்படடு வருவதனால, இச் சேவையை நடத்துவதற்கு தமிழக அரசு முழு ஒத்துழைப்பையும் வழங்கவேண்டும் என்றும், அவர் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவைக் கேட்டுக கொணடுள்ளார். (ம)

# மக்களின் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்கு மின்சாரசபை நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

மினவிநியோகம் குறித்து மக்கள் தரப்பிலிருந்து கிடைக்கும் முறைப்பாடுகளை விசாரணை செய்வதற்கு இலங்கை மின்சாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது.

அண்மைக்காலமாக இலங்கை மின்சார சபையினது மின் விநியோகத்தில் உள்ள குறைபாடுகள் தொடர்பாக ஏராளமான குற்றச்சாட்டுகள் இலங்கை மின்சாரசபையின் தலைமை அலுவலகத்திற்கு கிடைத்துள்ளன.

இவற்றைக் கருத்தில் கொண்டே மின்சாரசபை இந் நடவடிக்கையினை எடுத்துள்ளது.

இதற்காக ஒவ்வொரு மாவட்டங்களுக்கும் நேரடியாக விஜயம் செய்யும் இலங்கை மின்சாரசபையின் பொது முகாமையாளர் ரஞ்சித் பொன்சேகர அவ்வவ் மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் பிரதிநிதிகளைச் சந்தித்து மக்களின் முறைப்பாடுகள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார். (தி-4,61)

# விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

சுகாதார பராமரிப்பு, போஷணை மற்றும் ஊவா வெல்லஸ்ச அபிவிருத்தி அமைச்சினால் குடும்ப சுகாதார உத்தியோகத்தர்களை ஆட்சேர்த்துக் கொள்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுளளன.

2000,2001 கல்வியாண்டுகளில் க.பொ.த(உ/த) பரீட்சையில் தோற்றி மூன்று பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன், க.பொ.த (சா/த) பரீட்சையில் சிங்களம/தமிழ்மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் அடங்கலாக 4பாடஙகளில் திறமைச்சித்தி பெற்றிருப்பவர்கள் இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

இதற்கான விண்ணப்ப முடிவுத்தினம் எதிர்வரும் ஜுன் மாதம் 19ஆம் திகதியாகும். (உ-18)

### ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரியின் பிரச்சினைகள் குறித்து

# ஜனாதிபதியுடன் பேச்சு நடத்த கோரிக்கை விடுக்கிறார் சந்திரசேகரன்

(கொழும்பு)

பத்தனை ஸ்ரீபாத கல்வியற் கல்லூரி மாணவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட வன்முறைகளானது, தமிழ் மக்கள் மீதான மற்றுமொரு கந்தப்பொல சம்ப வமே எனக் கண்டனம் வெள யிட்டுள்ள மலையக மக்கள் முன்னணி, இந்தக் கல்லூரி மாணவருக்குள்ள பிரச்சினைகள் குறித்துப் பேச்சுவார்த்தை நடாத்துவதற்குச் சந்தர்ப்பம் அளிக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் கோரிக்கை ஒன்றையும் விடுத்துள்ளது.

இதுவிடயம் குறித்து மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரன் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளார்.

அனுப்பிவைக்கப்பட்டுள்ள மேற்படி கடிதத்தில்,

பத்தனை ஸ்ரீ பாத கல்வியற் கல்லூரிவிடயமாக ஹற்றன் நகரில் நடைபெற்ற மாணவர் ஊர்வலத்தில் இடம்பெற்ற துரதிஷ்டவசமான நிகழ்வுகளினால் இந்த அவசரக் கடிதத்தினை எழுதுகின்றோம்.

இந்திய வம்சாவளி மாணவர்களுக்கு இருக்கின்ற ஒரே கல்வியற் கல்லூரி ஸ்ரீபாத கல்வியற் கல்லூரி மட்டுமே என்பதைத் தாங்கள் அறிவீர்கள்.

இது இந்திய வம்வசாவளி மக்களுக்காக ஜேர்மனிய அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட கல்லூரி என்ற முழு வரலாற்றையும் தாங்கள் அறிவீர்கள்.

நான் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசில் தங்களோடு இணைந்திருந்த போது இக்கல்லூரி தமிழ் மாணவர்களுக்காகவே முழுமையாக வழங்கப்பட வேண் டுமென வலியுறுத்தியதை தாங்கள் ஏற்றுக் கொண்டதையும் நினைவுபடுத்துகினறேன்.

தற்போது அக்கல்லூரி சிறு சிறு அசம்பாவிதங்களினால் மாதக் கணக்கில் மூடப்பட்டிருக் கின்றது. இதனால், மாணவர் களின் கல்வி பாதிக்கப்பட்டிருப்ப தோடு எதிர் வரும் பரீட்சைக் காலங்களில் பரீட்சைக்குத் தோற்று பவர்கள் தங்களின் பாடத் திட்டங்கள் முடிவுறாததினால் பெரும் சிக்கல் களுக்கு முகம்கொடுக்க வேண்டியுள்ளது.

அதேநேரம் இதுவரை காலமும் அக்கல்லூரியில் தமிழ் பீடாதிபதியே நியமிக்கப்பட்டு வந்தனர். ஆனால், தற்போது பெரும் பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் பீடாதிபதியாக அங்கு நியமிக்கப்பட்டுள்ளார். இது அப்பிரதேச மக்களுக்குப் பெரும் மனத்தாக்கத்தை ஏற்ப டுத்தியுள்ளது.

எனவே,

*இக்கல்லூரி உடனடி யாகத் திறக்கப்பட வேண்டும்.

* தமிழ்ப் பீடாதிபதி ஒருவர் நியமிக்கப்பட வேண்டும்.

*கல்லூரியில் பிரச்சினைகளுக்குக் காரணமாக இருந்த உத்தியோகத்தர்கள் இடமாற்றம் செய்யப்படல் வேண்டும்.

இந்த மூன்று கோரிக்கைக ளுக்காகவே அன்றைய தினம் மாணவர்கள் ஹற்றனில் போராட்டம் நடாத்தினார்.

இப்போராட்டமானது சிங்கள மக்களுக்கு எதிரானதாகவோ அல்லது கல்லூரியை முழுமையாக தமிழ் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருவதற்காகவே ஏற்படுத்தப்பட்டதல்ல.

எனவே, இந்தத் தகவல்களை மனதில் கொண்டு இதுவிடயம் குறித்துத் தங்களோடு உடனடி யா கத் கலந்துரையாடி முடி வொன்றைக் காண்பதற்கு நேரம் ஒதுக் கித்தருமாறு கேட்டுக்கொள்கி றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (18)

# தமிழகத்தில் உள்ள அகதிகள் விரைவில் நாடு திரும்புவர்

(கொழும்பு)

தமிழகத்தில் உள்ள நலன்புரி முகாமில் நீண்ட காலமாக வசித்து வரும் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் விரைவில் நாடு திரும்பவுள்ளனர்.

இதற்கான ஏற்பாடுகளை ஐக்கிய நாடுகள் சபையும், அகதிகளுக்கான அமைப்பும் இணைந்து மேற்கொண்டு வருவதாக இந்தியாவுக்கான இலங்கையின் பிரதிநிதி உயர்ஸ்தானிகர் தெரிவித்துள்ளார்.

முதல்கட்டமாக சிவகங்கை, ஆலையூர் ஆகிய நலன்புரி முகாம்களில் வசிக்கும் அகதி கள் இலங்கைக்கு அழைத்து வரப்படுவார் என்றும், இதற்கான நடை முறைகள் குறித்த ஏற்பாடுகள் அடுத்த மாதம் பூர்த்தியாகும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (60,10)

# மட்டக்களப்பு அணியை யாழ்.அணி வென்றது

(கொழும்பு)

19 வயதிற்குட்பட்ட யாழ். மாவட்ட கிறிக்கொட் அணிக்கும் மட்டக்களப்பு அணிக்குமிடையில் தம்புள்ளவில் நேற்று நடைபெற்ற போட்டியில் யாழ்.மாவட்ட அணி 176 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யர்ழ்.அணி 45 ஓவர்களின் முடிவில் 7 விக்கெற்றுக்களை இழந்து 272 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் லொயிட், மதுசன், ரஜீவ் குமார் ஆகியோர் முறையே 73,51,40 ஓட்டங் களைப் பெற்றனர்.

மட்டக்களப்பு அணிவீரர்களான தனுபிரசாத், வள்ளுவன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மட்டக்களப்பு அணி 27.1 ஓவர்களின் முடிவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 96 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் லொயிட் 4 விக்கெட்டுக்களையும், மயூரன் 3 விக்கெட்டுக்களையும் வினோதன் 2விக்கட்டுக்களையும் வீழத்தினர். இதே வேளை மன்னார் அணிக்கும் யாழ். அணிக்குமிடையிலான போட்டி எதிர் வரும் 2ந் திகதி நடைபெறவுள்ளது. (ச)

## மண்டைதீவில் சங்காபிஷேகம்

(மண்டைதீவு)

மண்டைதீவு தெற்கு திடுதிடுக்கை வைரவர் கோயில் வருடாந்த சங்காபிஷேகம் இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

கிரியைகள் சிவஸ்ரீ கோ.கமல பூஷணக் குருக்கள் தலைமையில் இடம் பெறும்.

## தமிழர் ஆசிரியர் சங்கக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கதின் யாழ்.மாவட்டக் கூட்டம் எதிர் வரும் 2ந் திகதி புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் வ.கணேசமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்திற்கு யாழ்.மாவட்டத்திலுள்ள சகல கிளைகளினதும் தலைவர்கள், செயலாளர்கள், பொருளாளர்கள் மற்றும் தாய்ச் சங்க, மாவட்ட, வலய மட்ட நிர்வாக உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு பொதுச் செயலாளர் த.மகாசிவம் கேட்டுள்ளார். (ச)

# எயிட்ஸ் நோய் தாக்கத்தினால் இலங்கையில் 164 பேர் மரணம்

## - ஆய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

உயிர்கொல்லி நோயான எயிட்ஸின் தாக்கத்திற்கு உள்ளாகி இலங்கையில் இதுவரை 164 பேர் இறந்துள்ளதாகத் தெரிய வருகிறது.

இலங்கைக்கான உலக வங்கியின் எயிட்ஸ் விழிப்புணர்வுப் பிரிவும், இலங்கை எயிட்ஸ் தடுப்புப் பிரிவும் இணைந்து மேற்கொண்ட ஆய்வுகளின் பின்னர், வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்தப் புள்ளி விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கையில் உயிர்கொல்லி நோயான எயிட்ஸ் பரவுவதற்கு பரிசோதனை உட்படுத்தப்படாத இரத்த மாற்றுகை மற்றும் தகாத பாலியல் உறவு ஆகியனவே காரணமாகும்.

இலங்கையில் இவ் எயிட்ஸ் நோய்த் தாக்கத்திற்கு இலக்காகி இதுவரை 164 பேர் இறந்துள்ள னர். அத்துடன், நாடளாவிய ரீதி யில் சுமார் 600 பேர் வரையில் இந்த நோய்த் தாக்கத்திற்கு உள்ளாகிப் பெரிதும் பாதிக்கப் பட்டுள்ளனர். இவர்களில் அதிக எண்ணிக்கையில் ஆண்களே காணப்படுகின்றனர்.

எயீட்ஸ் நோய்க்கு இலக்காவோரின் எண்ணிக்கை கடந்த 5 ஆண்டு காலப்பகுதியில் மிகவும் அதிகரித்துள்ளதுடன், கடற் கரைப் பகுதிகளிலுள்ளோருக்கு இந் நோய்த் தொற்று அதிகமாக வுள்ளது. இந்நோயின் தாக்குத லுக்கு இலக்கானோர் கௌரவக் குறைவு என நினைத்து இது குறித்து மருத்துவப் பரிசோதனை கள் மற்றும் சிகிச்சைகள் பெற்றுக் கொள்ளாமையே இது அதிகளவில் பரவுவதற்குக் காரணமாகும் என அவ் அறிக் கையில் மேலும் சுட்டிக்காடடப் பட்டுள்ளது.

இதேவேளை, இலங்கையில் இவ் உயிர் கொல்லி எயிட்ஸ் நோயைக் கட்டுப்படுத்துவதற்கு உலக வங்கியின் எயிட்ஸ் தடுப் புப் பிரிவும், எயிட்ஸ் விழிப்புணர் வுப் பிரிவும் இணைந்து பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.(18)

அரிய சந்தர்ப்பம்!!!
யாழ்.நகரில்BRITISH ENGLISHகற்கலாம்!
SPOKEN ENGLISH & GRAMMAR
குறுகிய காலத்தில் ஆங்கிலம் பேச, வாசிக்க எழுத கற்கலாம். அடிப்படை ஆங்கிலத்திலிருந்து உயர்தர ஆங்கிலம் வரை பல கற்கை நெறிகள் உண்டு.
வெளிநாடு செல்பவர்களுக்கு விசேட தினசரி வகுப்புக்கள், உத்தியோகத்தர்களுக்கு விசேட சனி-ஞாயிறு வகுப்புக்கள்.
TOEFL-IELTS வகுப்புக்களா. நேரில் தொடர்பு கொண்டு விபரம் அறியலாம். முன்கூட்டியே பதிவு செய்யவும் பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
GRAMMAR-EXERCISES- READING-ESSAYS-LETTERS-TRANSLATION-SUMMARY-ETIQUETTE(MANNERS)-VIDEO LESSONS
அச்சடித்த பாடங்கள்-பயிற்சிகள்
LECTURES BY:
MR.A.RAJAGOPALAN MR.B.RUBAN
MR.SAM MS.YASODARA
ஆரம்பம்:05-06-2004
UNIVAC COLLEGE
(AFFILIATED TO BANGALORE UNIVERSITY)
NO.527,K.K.S. ROAD, JAFFNA
(MILKWHITE BUILDING)
PHONE:0776232935 [8541]

## வெளிநாட்டில்...

ஆழமான புரிந்துணர்வைக் கொண்டுள்ளது. காரணம் இந்தியாவிலேயே இது போன்ற இனப்பிரச்சினைகள் உள்ளன. எனவே இந்தியா சிறந்தநாடாக இருக்குமென ஹெல உறுமய நம்புகிறது.

இதேவேளை, பேர்ளின் நகரில் அண்மையில் சமாதானச் செயலகத் தலைவர்கள் ஜயம்பதி விக்ரமரட்ணாவுக்கும் புலித்தேவனுக்குமிடையில் நடைபெற்றிருந்த பேச்சுக்களைத் தாம் எதிர்க்க வில்லை என்றும் அவர் மேலும் தெிரிவித்தார்.(த-6)

## அரசு...

திருக்கிறார்.

அதேவேளை புலிகள் தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக பங்குபற்றுவதையோ இடைக்கால நிர்வாகக் கோரிக்கைகளின் அடிப்படையில் பேச்சுக்கள் நடைபெறுவதையோ தாம் எதிர்பார்ப்பதாகவும் ஜே.வி.பி தெரிவித்துள்ளது. (த-6)

## கற்கள்...

தனது படையுடன் இலங்கைக்கும் ராமேஸ்வரத்துக்குமிடையில் கற்களால் பாலமமைத்து பாக்கு நீரிணையைக் கடந்தார் என்பதும் அப்போது கற்கள் மிதந்தன என்பது இதிகாசக் கதை

அக்காலத்தில் இலங்கையில் குடியேற்றங்கள் இருந்தனவென ஆய்வுகள் தெரிவிக்கும் வேளையில் ராமேஸ்வரத்தில் தற்போது மிதப்பதாகக் கூறப்படும் கற்களை ஆய்வுக்குட்படுத்திவரும் ஜி.மோகன் தாஸ் என்பவர் இக் கற்கள் இராமர் காலத்தில் பாலங்கட்டப் பயன் படுத்தப்பட்ட கற்களேயெனத் தெரிவித்துள்ளார்.

ஆனால் தற்போது இந்த மிதகும் கற்கள் அவுஸ்ரேலியா, சென்னை என்னும் சிறிய தீவுகளில் காணப்படும் முருகைக்கற்களேயெனத் தெரிவிக்கப்படுகின்றது.ஆனால் இக்கற்களில் வளி இருக்கவில்லை. இவை 40 வகையான இரசாயனப் பொருட்களைக் கொண்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.தற்போது இக் கற்கள் அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசாவினால் ஆய்வுக்காகப் பெறப்பட்டுள்ளன(த-

# மரண அறிவித்தல்

## பத்மநாதன் செல்வநாதன் (கண்ணா)



அரியாலை மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கண்ணா என்று அன்பாக அழைக்கப்படும் பத்மநாதன்-செல்வநாதன் 2004.05.30 அன்று அகால மரணமடைந்துவிட்டார்.

அன்னார் பத்மநாதன், ஜெயமணி தம்பதிகளின் அன்பு மகனும் ரவீந்திரநாதன் (இலங்கை மின்சார சபை-மன்னார்) சசீந்திரநாதன், கேசவநாதன் (ஸ்ரீலங்கா ரெலிக்கொம்-மன்னார்),பரலோகநாதன், சிவலோகநாதன்(மாணவன் கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்.) ரஞ்சிதமலர் (சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை யாழ்.மா.சபை), புஷ்பமலர் கல்வியியற் கல்லூரி கோப்பாய், சாந்தமலர், பவளமலர், ஜெயமலர்(ஆசிரியை யாழ்.நல்லூர் ஆனந்தா வித்தியாசாலை) காலஞ்சென்ற பூலோகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும்,

வசந்தகுமாரி, காலஞ்சென்ற ஆனந்தசிறிஸ்கரன், ஆனந்த ஜெஸ்கரன் (யாழ்.மாவட்ட கூட்டுறவுச் சபை),புஸ்பராஜா, நந்தகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும்,

மயூரன், கஜனி, அஜித், ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், நிருஷா, தனுஷா, பானுஷா, குருலக்சன், அஜந்தன், கஜந்தன், கரோன், டனுசிகா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார். அன்னாரின் ஈமக் கிரியைகள் 2004.05.31 (இன்று) பி.ப.3 மணிக்கு அவரது இல்லத்தில நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்திறகு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

120,ஆசிர்வாதப்பர் வீதி,
அரியாலை மேற்கு.
யாழ்ப்பாணம்.

தகவல்:
**நா.பத்மநாதன்,**
**(தந்தை)**

(7886)

இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு யாழ்ப்பாணம் என்னும் மகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.05.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.